
JESUS REDEEMS MINISTRIES
வாலிபர்
உலகம்
மலர் 14
இதழ் 02
ஏப்ரல் 2023
ஆண்டு சந்தா ₹ 100
அவர் அங்கு இல்லை, சொன்னப்படி
உயிர்த்தெழுந்தார்!

# உள்ளே...

வாலிபர் உலகம்


04



அன்பிற்காக ஏங்கினேன்!

சிலுவையில் அறையப்பட்ட இயேசு!



12

20



வசன எழுப்புதல்!

நிபந்தனைகளும் வாக்குத்தத்தங்களும்



28

32



Coffee with பத்திரிக்கையாளர்




30,000 வாலிபர்கள் கையில் தவழும் வாலிபர் உலகம் பத்திரிகை உங்கள் கையில் உள்ளதா?

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன் SMS மூலமாகவோ 9750955547 என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்.

வாலிபர்களே! உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகுந்த மாற்றத்தைக் கொண்டு வரும் இப்பத்திரிக்கையை நீங்கள் தவறாமல் வாசியுங்கள். நீங்கள் வாசித்தபின் இப்பத்திரிக்கையை உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கக் கொடுங்கள்!

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் **சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்!** Mo/ Cheque / DD "Jesus Redeems Youth Ministry" என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும். நீங்கள் பணம் செலுத்திய பின்பு, உங்களது பெயர், முகவரி மற்றும் ரசீதை **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்.

| | |
|---|---|
| A/c. Name | : JESUS REDEEMS YOUTH MINISTRY |
| A/c. No. | : 054100710400515 |
| BANK | : TAMILNAD MERCANTILE BANK LTD., |
| BRANCH CODE | : Prahasapuram, Nazareth |
| BRANCH CODE | : 000054 |
| IFS CODE | : TMBL0000054 |
| MICR CODE | : 627060021 |
| SWIFT CODE | : TMBLINBBTUT |


JESUS REDEEMS MINISTRIES

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,** நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.

Phone: 04639-353333 | Cell:9750955547

youth@jesusredeems.org | www.jesusredeems.com | youth.jesusredeems.com



ஆசிரியர்: மோகன் சி. லாசரஸ் இணை ஆசிரியர்: அவினாஷ் ஆசிரியர் குழு: வயலா । ஜெயசீலன் । ரவி । ரேச்சல் । கிளாடிஸ் । சுமா । கெத்சி கிளார்வின் । சதீஷ் । காலேப் । பெனிட்டா । ஜெயா । ஜாய்லின் ஜான்

வடிவமைப்பு: டேவிட்சன்

## தலைவாசல்

# என் மீட்பர் உயிரோடே...

**அன்பான இளம் நெஞ்சங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!**

இன்றைக்கும் திறந்திருக்கும் இயேசுவின் கல்லறை அநேகரின் வாழ்க்கைக்கு ஒரு பெரிய நம்பிக்கையாக இருக்கிறது. பல நேரம் பிரச்சனையும் போராட்டமும் நம்மை சூழ்ந்தவுடன் இயேசு என்னை கைவிட்டாரோ என்று நினைக்க தோன்றுகிறது. நிந்தையும் அவமானமும் நம்மை நெருக்கும் போது, இயேசு நம்மை மறந்து விட்டாரோ என்ற எண்ணமும் உண்டாகிறது.

இதேபோல் **Martin Luther** ஒரு முறை மிகவும் சோர்ந்து போய் தன் மேஜையின் அருகில் அமைதியாய் ஒரு காரியத்தை யோசித்துக் கொண்டிருக்க; அவருடைய மனைவி திடீரென்று கருப்பு ஆடை அணிந்து அவர் முன் வந்து நின்றார்கள். உடனே அதிர்ந்து போன **Martin Luther**, யார் இறந்து போனது; நீ கருப்பு ஆடை அணிந்து வந்திருக்கிறாயே என்று அதிர்ச்சியுடன் கேட்டார். அதற்கு அவர் மனைவி, இயேசு கிறிஸ்து இறந்து விட்டார் என்று மிகவும் வருத்தத்தோடு சொன்னார்கள். அதைக் கேட்டதும் **Martin Luther** என்ன சொல்கிறாய்? ''அவர் உயிர்த்தெழுந்த இயேசு, இன்றைக்கும் ஜீவிக்கிறார்'' என்று மிகவும் ஆத்திரத்தோடு சொன்னார். உடனே அவரின் மனைவி, இயேசு உயிரோடு இருக்கிறார் என்று சொன்னால், நீங்கள் ஏன் துக்கமாக இருக்கிறீர்கள், இயேசு உயிரோடு இருக்கிறார் என்றால் உங்கள் சோர்வுக்கு காரணம் என்ன? என்று கேட்டார்கள். உடனே **Martin Luther**க்கு ஒரு பெரிய விசுவாசம், அலைகடல் என வெகுண்டு எழ, கலங்கின கண்களோடு, உரத்த சத்தமாய் கூறினார், இயேசு உயிரோடு இருக்கிற தேவன், **"மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்..."** (வெளி. 1:18) என்று சொன்னவர் இயேசு ஒருவரே என்று இயேசுவின் நாமத்தை உயர்த்தவும், துதிக்கவும்



எனக்கன்பான வாலிபர்களே, பலருடைய மூடிய கல்லறையும், நினைவிடமும் ஞாபகத்திற்கு மட்டுமே. ஆனால் உலகிலேயே திறந்திருக்கும் ஒரே ஒரு கல்லறை; நம் இயேசுவின் கல்லறையே, முழு மனித குலத்தின் நம்பிக்கைக்கு ஆதாரமாக இருக்கிறது. அவர் உயிரோடு இருப்பதால் இந்த நாளையும், நாளைய தினத்தையும் நம்பிக்கையோடு கழிக்கிறேன்.

உயிர்த்தெழுந்த இயேசு நமக்கு நம்பிக்கை கொடுப்பது மட்டுமல்லாமல், நித்திய மகிழ்ச்சி, நீங்கா சமாதானம், நிலையான சந்தோஷம், நீடித்த வாழ்வையும் கொடுக்கிறார். அந்த உன்னதரின் உண்மையான அன்பை, மரித்துக் கொண்டிருக்கும் நம் வாலிப சமுதாயத்திற்கு சொல்ல தீவிரிக்க வேண்டும், தீவிரம் காட்ட வேண்டும்.

**உயிர்த்தெழுந்த இயேசுவை உலகத்துக்கு காட்ட வேண்டியது எழுப்புதல் வீரனாகிய உன்னுடைய ஓயாத பணி!**

**உயிர்த்தெழுந்த இயேசு தேடுவது உன்னை தான்!**

**அவர் சொன்னபடி உயிர்த்தெழுந்தார் என்று உலகம் முழுவதும் பறைசாற்ற வேண்டியது உன்னுடைய கடமை!**

**உன்னுடைய மேலான பொறுப்பு.**

**உணர்ந்திடு!**

**உரைத்திடு!**

கிறிஸ்துவின் பணியில்
அவினாஷ்



# அன்பிற்காக ஏங்கினேன்!

கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து, சிறுவயதில் VBS மூலமாக அநேக சிறு பிள்ளைகளை கர்த்தர் பக்கமாக திருப்பின சகோதரி, தனது இளம் வாலிப வயதில் அன்பிற்காக ஏங்கி தனக்கென்று ஒரு நண்பர்கள் வட்டாரத்தை உருவாக்கி, இயேசுவை விட்டு பின்வாங்கி போன போது, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தேடி வந்து அவரின் மாயமற்ற அன்பை வெளிப்படுத்தின விதத்தை அவர்களிடமே கேட்டு தெரிந்து கொள்வோமா!

சாட்சி: பெனிட்டா

### உங்களது குடும்பம் மற்றும் சிறு பிராயம் பற்றி சொல்லுங்களேன்?

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரத்தில், திரு. ஜெயபால், திருமதி மரியாள் தம்பதியருக்கு 2வது மகளாகப் பிறந்தேன். எனக்கு நெல்சன் அமல்ராஜ் என்ற அண்ணனும், தாசன் என்கிற தம்பியும் இருக்கிறார்கள். நான் ITI (ELEC) படித்து முடித்து, இப்போது அறுவடை சுவிசேஷ பயிற்சி கல்லூரியில் (HETC) படித்து வருகிறேன். சிறு வயது முதல் எனது தாய் தகப்பனுக்கு கீழ்ப்படிந்து நடந்ததே இல்லை. டிவி, சினிமா, நாடகம் என பல பாவ காரியங்களுக்கு அடிமையாக வாழ்ந்தேன். எனது அம்மாவிடம் சண்டை போட்டு அவர்களை அநேக நேரங்களில் அடித்தும் இருக்கிறேன்.









### ஓகே...அப்படியானால் எப்படி இயேசுவை ஏற்றுக் கொண்டீர்கள்?

எனது 13வது வயதில் (8ம் வகுப்பு) இரட்சிக்கப்பட்டேன். ஆனால் நான் 7 வயதாக இருக்கும் போதே, அதாவது நான் இரண்டாம் வகுப்பு படிக்கும் போதே இயேசு என்னை முன்குறித்தார். VBS என்றால் என்ன என்று தெரியாத வயதிலேயே, எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள சிறுவர்களை அழைத்து வைத்து, எனக்கு சபையில் சொல்லிக் கொடுத்த வசனங்களை அவர்களுக்கு கற்றுக் கொடுப்பதோடு, அம்மா எங்களுக்காக சமைத்து வைத்திருக்கும் சாப்பாட்டையும் அந்த பிள்ளைகளுக்கு கொடுப்போம். நாட்கள் செல்ல செல்ல சபையில் எப்படி VBS நடத்துகிறார்களோ, அதேபோல் செய்ய வேண்டும் என்ற எண்ணம் வந்தது. சபைகளில் VBSக்காக நோட்டீஸ் மற்றும் போஸ்டர் அடிப்பது போல் அடித்து ஒட்ட வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால் அந்த நாட்களில் அப்படி போஸ்டர் பிரிண்ட் அடிக்க பணம் இல்லாததால் A4 பேப்பரில் VBS எங்கள் வீட்டில் நடைபெறுகிறது என எழுதி நாங்களே எல்லா சுவர்களிலும் ஒட்டுவோம். இப்படியாக சிறுவயதில் இருந்து ஊழியம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சை இருந்தது.

### சூப்பர்... சிறுவயதிலேயே ஊழிய வாஞ்சையைப் பெற்றீர்கள்... தொடர்ந்து செய்தீர்களா?

ஒரு பக்கம் ஊழியமும் வளர்ந்தது, அதே சமயம் உலக அன்பும், உலக காரியமும் கூட வளர ஆரம்பித்தது. 8ம்



வகுப்பு படிக்கும் போது நான் செய்த ஒரு தவறை இயேசு உணர்த்தினார். மனதளவில் நான் மாற வேண்டும் என்று நினைத்தாலும், என்னால் மாற முடியவில்லை. காரணம் உலக நண்பர்களின் அன்பு. நண்பர்கள் இல்லை என்றால் என் வாழ்க்கையே இல்லை என்கிற அளவுக்கு ஆகிவிட்டது. ஆனால் தொடர்ந்து **Sunday Prayer**, வீட்டு ஜெபம், **VBS** என ஊழியங்களை நடத்திக் கொண்டிருந்தேன். 8ம் வகுப்பு படிக்கும் போது இரட்சிக்கப்பட்டேன். ஆனால் என்னுடைய பாவத்திலிருந்து வெளியே வர நான் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. "நண்பர்கள் இல்லை என்றால் என் வாழ்க்கையே இல்லை", என்று நினைத்திருந்த நண்பர்களால் பல பிரச்சனைகளை சந்தித்தேன். இந்த உலகத்தில் நண்பர்களுக்காக நான் செலவழித்த பணத்தைப் போல யாருமே செலவழித்திருக்க முடியாது. நண்பர்கள் பேசவில்லை என்றால் எனது கையை நானே வெட்டிக் கொள்வேன். சாப்பிடாமல் அம்மா அப்பா என எல்லோர் மேலும் வெறுப்பைக் காட்டுவேன். 24 மணி நேரமும் நான் நண்பர்களே உலகம் என வாழ்ந்து வந்தேன். எனக்கு பிடித்த எதையுமே நான் செய்தது இல்லை. என் தோழிகளுக்காக எதை வேண்டுமானாலும் செய்வேன். ஆனால் என் மனதில் நிம்மதியோ சமாதானமோ இல்லாமல் இருந்தது.

**கேட்கவே கஷ்டமாக இருக்கிறது... சரி நண்பர்களால் உங்களுக்கு சந்தோஷம் இல்லை... அதன் பிறகு நண்பர்களின் அன்பை நாடிச் சென்றீர்களா?**

பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் போது ஒரு ஆசிரியர் என் மீது மிகவும் அன்பாய் இருந்தார்கள. அவர்கள் மீது அளவுக்கு அதிகமாக அன்பு வைத்தேன். குடும்பத்தையே வெறுத்து, அவர்களையே எனது அம்மா என்ற அளவுக்கு வைத்திருந்தேன். அந்த அன்பினாலும் கண்ணீரும் துக்கமும் தான் கிடைத்தது.

அதோடு விடாமல் ITIயில் சேர்ந்தவுடன் ஒரு புது தோழி கிடைத்தாள் என்று எல்லா காரியங்களையும் அவளிடம் சொல்லுவேன். அவளுக்கு திருமணம் முடிந்து ஆறு வருடங்கள் ஆகியும் குழந்தை இல்லாமல் இருந்தாள். அவளுக்கு குழந்தை இல்லை என்பதால் என்னுடைய அன்பு முழுமையாக அவளுக்கு கிடைக்க வேண்டும் என்று நினைத்து உண்மையான அன்பை அவளிடம் காண்பித்தேன். ஒருநாள் அவள் வகுப்பிற்கு வராவிட்டால், நான் அழுது கொண்டே இருப்பேன். அவள் வீட்டிற்கு எல்லா உதவிகளையும் செய்வேன். அவளுக்காக பல கோவில்களுக்கும் சென்று இருக்கிறேன். இந்த சூழ்நிலையில் கம்பெனியில் வேலைக்கு சேர்ந்து அங்கு ஐந்து மாதங்கள் வேலை செய்ததில் 20,000 ரூபாய் சம்பளம் கிடைத்தது. அதில் என் பெற்றோருக்கு 4000 ரூபாய் மட்டும் கொடுத்து விட்டு, மீதி 16 ஆயிரம் ரூபாவை நண்பர்களுக்காக செலவழித்தேன். இயேசுவையும், இரட்சிப்பையும் முற்றிலும் மறந்து விட்டேன். ஆனாலும் பேருக்காக, கடமைக்காக ஊழியமும் செய்து வந்தேன்.

**சரி... தோழிகளால் சந்தோஷத்தை இழந்தீர்கள்... இயேசுவை மறந்தீர்கள், பேருக்காக ஊழியம் செய்தீர்கள்... அப்படி என்ன ஊழியம் செய்தீர்கள்?**

உலக அன்பிற்கு அடிமையாக இருந்த போதிலும் கர்த்தர் என்னை நினைவுகூர்ந்து பல இடங்களில் சுவிசேஷ ஊழியம் செய்ய உதவி செய்தார். ஒரு கிறிஸ்தவ ஸ்தாபனத்தின் மூலம் ஒரு வருடத்திற்குள் 14,000 சிறு பிள்ளைகளை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்க கிருபை செய்தார். நான் இயேசுவை விட்டு விலகி சென்றாலும் அவருடைய ஊழியத்திற்கு என்னை அனுப்பி கொண்டே இருந்தார். "என் தோழிக்காக 10 மாதம் நான் ஒரு நேர சாப்பாட்டை தவிர்த்து, உபவாசம் செய்து ஜெபிக்கிறேன், அவளுக்கு குழந்தை

மேரி புஸ்பம் தன் குடும்பத்துடன்





பாக்கியத்தை கொடுக்க வேண்டும்'' என்று ஜெபித்தேன். அதேபோல் 10 மாதம் முடிந்து இரண்டாவது வாரத்தில் அவள் கர்ப்பமாக இருக்கிறேன் என்று சொன்னாள். இயேசு என் ஜெபத்தைக் கேட்டு 2020ல் ஒரு பெண் குழந்தையையும் 2021ல் ஆண் குழந்தையையும் கொடுத்தார். ஆறு வருட பிரச்சனைக்கு தீர்வு கிடைத்தது.

எதிர்பாராதவிதமாக ஒரு நாள், தவறான பாதையில் சென்ற அவளை நான் கண்டித்து உணர்த்தியதால், செய்யாத காரியத்தை நான் செய்ததாக கூறி, நான் வாங்கிக் கொடுத்த எல்லா பொருட்களையும் என் முகத்தில் தூக்கி எறிந்து, என்னை அடித்து, அநேகர் முன்பு அவமானப்படுத்தி வீட்டை விட்டு வெளியே அனுப்பினாள். அப்போதுதான் நான் தனிமையை உணர ஆரம்பித்தேன். எனக்குள் மனபாரம், மன வருத்தம் அதிகமாக இருந்தது.

அப்படி ஒரு நாள் தனிமையில் இருக்கும் போது, ''மகளே உன் அழைப்பு வேறு; ஏன் அழுகிறாய்'' என்று என்னை இயேசு தேடி வந்தார். இயேசுவின் சத்தத்திற்கு செவி கொடுக்காமல், ''ஊழியம் வேண்டாம், எனக்கு ஏதாவது வேலைக்கு வழி திறந்து தாங்க'' என்று கேட்டேன். இயேசு ''ஊழியம் செய்'' என்று சொன்னார். ஆனாலும் நான் எனக்கு வேலை தான் வேண்டும் என்று மிகவும் வருந்தி கேட்டு ஜெபித்ததால், கர்த்தர் மனமிரங்கி ஒரு தனியார் கம்பெனியில் வேலை கிடைக்க செய்தார். அந்த இடத்தில் இயேசுவைப் பற்றி சொல்லி அநேகரை இயேசுவுக்குள் வழிநடத்தியதால், நிர்வாகம் என்னை கடுமையாய் கண்டித்து ''இனி இப்படி செய்தால் வேலைக்கு வரக்கூடாது'' என்று எச்சரித்தார்கள். ஆனால் எந்த இடத்தில் மனிதர்கள் முன்பாக தலைகுனிந்து நின்றேனோ, அதே இடத்தில் என் தலையை தேவன் உயர்த்தினார். வெட்கப்பட்ட அதே கம்பெனியில் 'Best winder and worker' என்ற நிலைமைக்கு தேவன் என்னை உயர்த்தினார்.

**சூப்பர்... வேலை ஸ்தலத்தில் உயர்த்தினார்... அதே கம்பெனியில் வேலை செய்கிறீர்களா? இப்பொழுது என்ன செய்கிறீர்கள்?**

உலக அன்பும் மாயை, உலகப் பொருள், வேலை, பணம், படிப்பு எல்லாமே மாயை என்பதை இயேசு எனக்கு உணர்த்தினார். இப்பொழுது எல்லாவற்றையும் உதறிவிட்டு, அவருக்காக முழு அர்ப்பணிப்புடன் அறுவடை சுவிசேஷ பயிற்சி கல்லூரியில் படித்து வருகிறேன்.

**வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

இந்த உலகத்தில் நாம் மற்றவரிடம் காட்டுகின்ற அன்பு எல்லாம் மாயையே! ஒரு நாள் அந்த அன்பு நம்மை காயப்படுத்தி விடும். ஆனால் எந்த ஒரு எதிர்பார்ப்புமின்றி அன்பைக் காட்ட ஒருவர் காத்துக் கொண்டிருக்கிறார், அவரால் தான் மெய்யான, மாய்மாலமற்ற அன்பை காட்ட முடியும். நம்முடைய முதல் இடம் எப்பொழுதும் இயேசுவுக்கு மட்டும் தான் கொடுக்க வேண்டும். முதலில் நம்மை குறித்து அவருடைய நோக்கமும் சித்தமும் அழைப்பும் என்னவென்று கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும். எப்போதும் நாம் மட்டுமே அவரிடம் பேசிக் கொண்டிருக்கிறோம்; அவர் பேசுவதற்கு இடம் கொடுக்க வேண்டும். அவருடைய விருப்பத்தை அறிந்து கொள்ள வேண்டும். அவருடைய சித்தம் செய்ய அவருடைய சத்தத்தைக் கேட்க வேண்டும். அப்பொழுதுதான் தேவனின் அன்பை நாம் முழுமையாக பெற்றுக்கொள்ள முடியும்.

அன்பான வாலிபர்களே! அருமை சகோதரி மேரி புஷ்பம், நண்பர்கள் தான் வாழ்க்கை என்று தனக்கு உண்டான எல்லாவற்றையும் நண்பர்களுக்கு என்று கொடுத்தும், உண்மையான அன்பை பெற முடியவில்லை. தனிமையின் நேரத்தில் கர்த்தர் நேரடியாக அவர்களை சந்தித்து அவருடைய கல்வாரி அன்பை விளங்கப் பண்ணி, இன்றைக்கு அநேகருக்கு சாட்சியாக பயன்படுத்தி வருகிறார். இதேபோல் உங்களையும் தேவனால் பயன்படுத்த முடியும். அதற்கு நீங்கள் கர்த்தருடைய சத்தத்தை கேட்டு அவருடைய சித்தத்தை மாத்திரம் செய்ய உங்களை அர்ப்பணிக்க வேண்டும்! ■




புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

கிறிஸ்து இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்தக் கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. சரியான விடையை கோடிட்ட இடங்களில் நிரப்பி வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.

## வினாக்கள்

1. ஸ்திரீகளின் வலதுபக்கத்திலே, வெள்ளையங்கி தரித்தவனான ஒரு ---------- கண்டு பயந்தார்கள்.
2. கல்லறையின் உள்ளே பிரவேசித்தவர்களின், இயேசுவின் -------- காணாமல் மிகுந்த கலக்கமடைந்தார்கள்.
3. -------- வஸ்திரந்தரித்த இரண்டு பேர், உள்ளே பிரவேசித்தவர்கள் அருகே நின்றார்கள்.
4. ஸ்திரீகள் நடந்த எல்லாவற்றையும் -------- சொன்னார்கள்.
5. -------- அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்து இறங்கி வந்தான்.
6. தூதனுக்கு, காவலாளர் பயந்ததினால் திடுக்கிட்டு -------- போலானார்கள்.
7. இயேசுவை அறியாதிருந்த மரியாள், அவரை -------- என்று எண்ணினாள்.
8. இயேசு அவர்கள்மேல் ஊதி -------- பெற்றுக் கொள்ளுங்கள் என்றார்.
9. கல்லறைக்குள் பிரவேசித்தவர்கள் -------- தரித்தவனாய் ஒருவனைக் கண்டு பயந்தார்கள்.
10. கர்த்தருடைய தூதனின் வஸ்திரம் -------- வெண்மையாய் இருந்தது.



கடந்த மாத வெற்றியாளர்
அரவிந்த், திருச்சி
அவர்களை வாழ்த்துகிறோம்.

Jesus Redeems Youth Ministries,
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535.
eMail: youth@jesusredeems.org

### கடந்த மாத விடைகள்

1. ஆஸ்நாத் (ஆதி. 42:45)
2. பெபேயாள் (ரோமர் 16:1)
3. லோவிசாள் (2 தீமோ. 1:4,5)
4. யோவன்னாள் (லூக்கா 8:3)
5. ராகேல் (ஆதி. 35:19, 49:31)
6. தாமார், ராகாப், ரூத் (மத். 1:3,5)
7. மகதலேனா மரியாள் (மாற்கு 16:9)
8. ரூத் (ரூத் 4:15)
9. யாகேல் (நியா. 5:24)
10. அத்சாள் (எஸ்தர் 2:7)




# சோதனையை வென்று, சாதனைப் படைக்க...

ஆலோசனை: அவி

நான் ஒரு அலுவலகத்தில் Team Leaderஆக இருந்து பணி செய்து வருகிறேன். கடந்த லாக்டவுன் நாட்களிலிருந்து மொபைலில் வீடியோக்கள் பார்க்க ஆரம்பித்தேன். பின்னர் NETFLIX, Web Series என்று இரவு ஆரம்பித்தால் அடுத்த நாள் காலை வரை பார்த்து விட்டு அப்படியே வேலைக்கு செல்வேன். இதனால் கண் வலி, சோர்வு என உடலில் பல பிரச்சனைகள் வந்து விட்டது. சரியான தூக்கமில்லாததால் என் வேலையில் கவனம் செலுத்த முடியாமல், Projectஐ முடிக்க முடியாத சூழ்நிலை. ஒரு பக்கம் வரவேண்டிய Appraisal வரவில்லை என்பதால் மனசோர்வு, மனஅழுத்தம் உண்டாகிறது. Team Performance பாதிக்கப்பட்டு விட்டது என்ற கவலை இன்னொரு பக்கம். இப்படி பல பிரச்சனைகளினால் எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. பல நேரங்களில் வேலையிழந்து விடுவோமோ என்ற எண்ணம் என்னை Depressionக்கு கொண்டு செல்கிறது. நான் செய்வது தவறு என்று தெரிகிறது, ஆனால் என்னால் வீடியோ பார்ப்பதைத் தவிர்க்க முடியவில்லை. சில நேரம் என்னையே எனக்கு பிடிக்கவில்லை. எனக்கு ஒரு ஆலோசனைக் கொடுங்க பிரதர்

- சினேகா, சென்னை.

அன்பு சகோதரி சினேகா! இன்றைய இளைஞர்கள் மத்தியில் காணப்படும் மிகப் பெரிய பிரச்சனை இதுதான். அதாவது அநேக நேரம் நீங்கள் செய்வது தவறு என்று தெரிந்தும் அதை விடமுடியவில்லையே என்ற வருத்தமும், மேலும் இந்த பிரச்சனையால் ஏற்படும் பின் விளைவுகளும் உங்களை பாதிப்பதை நன்கு உணர முடிகிறது. இரவு நேரங்களில் வீடியோ, சீரியல் பார்ப்பதால் வரும் பிரச்சனைகளும், வேலையில் ஏற்படும் பின்னடைவுகளும் உங்கள் மனதை பெரிதும் பாதித்திருக்கிறது

சில நேரம் உங்களுடைய வேலையே பறிபோய் விடுமோ என்ற கேள்விக்குறியோடு இருக்கிறீர்கள். இரவு நேரத்தில் பார்த்த சீரியல், வீடியோ Break timeல் நண்பர்களோடு பேசும் போது மிகவும் Interestஆக இருக்கும். ஆனால் இப்படி மணிக்கணக்காக மொபைல் பயன்படுத்தினால் கண்களில் கண்ணீர் வருவது போன்ற காரியங்கள், மேலும் உடல் சுகவீனம் என்று வரும் போது வேலை செய்ய முடியாத அளவிற்கு பிரச்சனையாக மாறுகிறது. பல நேரம் நீங்கள் செய்வது தவறு என்று தெரிந்தும், நிறுத்த முடியாமல் அதில் அடிமையாக இருப்பதை உங்களாலேயே உணர முடிகிறது.

சினேகா! ஒரு பக்கம் விடமுடியவில்லையே என்ற வருத்தம். இன்னொரு பக்கம் இந்த மொபைல் அடிமைத்தனத்தினால் ஏற்படும் சோர்வு மற்றும் பெலவீனங்களை நினைத்தால் உங்களையே உங்களுக்கு பிடிக்கவில்லை. சினேகா! நீங்கள் விரும்பினால் மட்டுமே இந்த அடிமைத்தனத்திலிருந்து வெளியே வர அதிக வாய்ப்பு உண்டு. இந்த பழக்கம் ஒரு சாதாரண காரியம் இல்லை. காரணம், உங்களை அறியாமலே அந்த மொபைலுக்கு நீங்கள் அடிமையாகி

இருப்பது உங்களுக்கு தெரியவில்லை. இந்த பழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தால் எளிதில் வெளியே வரலாம். இல்லையென்றால், இதுவும் ஒரு அகல பாதாளம் போன்ற ஒரு கண்ணி, அதில் வீழ்ந்தவர்கள் வெளியே வருவது மிகவும் கஷ்டம்.

ஆனால் சில தீர்மானங்களை மேற்கொண்டால் எளிதில் இந்த வலையிலிருந்து வெளியே வந்து சுதந்திரமாக வாழலாம். இல்லையென்றால் இந்த வலைத்தளம் என்னும் கொடிய கண்ணியிலிருந்து சிக்கி சின்னாபின்னமாக வாய்ப்பு உண்டு.

## வெளியே வர சில டிப்ஸ்

- முதலில் உங்கள் மொபைலில், Well being என்ற ஒரு Optionயை பயன்படுத்துங்கள். அப்பொழுது தான் எவ்வளவு நேரம் Use பண்ணலாம் என்ற Control உண்டாகும். மேலும் குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு உங்களால் எந்த ஒரு Appயும் பயன்படுத்த முடியாது.
- இரவு 9:30 மணிக்கு மேல் மொபைல் பயன்படுத்துவதை தவிர்க்கவும்.
- தேவையில்லாமல் Data Recharge செய்ய வேண்டாம்.
- வீடியோ பார்ப்பதற்கு பயன்படுத்தபடும் Appயை Delete செய்யலாமே (Netflix, Facebook, Instagram).
- Netflix மற்றும் Amazon Prime போன்றவற்றை Recharge செய்வதை தவிர்க்கவும்.
- உங்கள் நண்பர்களின் வட்டாரத்தை மாற்ற முயலுங்கள். காரணம், சினிமா, சீரியல் பற்றி பேசும் போது பார்க்க வேண்டும் என்ற யோசனை வரும். அது ஒரு சோதனையாக உங்களுக்கு மாறி மொபைல் பார்க்க முயற்சிப்பீர்கள்.
- அதிகாலையில் எழும்பும் பழக்கத்தை கடைபிடியுங்கள்.
- காலை உடற்பயிற்சி, Cycling, Jogging போன்றவற்றை கிரமமாக செய்யுங்கள். அப்பொழுது மாலையில் அலுவலகத்திலிருந்து திரும்பும் போதே சோர்வு உண்டாகி தூக்கம் வரும்.
- சரியான தூக்கம் இருந்தாலே உங்கள் வேலையை உற்சாகமாக செய்யலாம். திறமையாக செயல்படுவதற்கான சூழ்நிலையும் அமையும்.
- எந்த வேலை பறிபோகும் என்று நினைத்தீர்களோ, அதே வேலையில் உயர்வும், மேன்மையும் உண்டாகும். எனவே யோசித்து செயல்படுங்கள்.

நான் மேலே கூறியுள்ள இந்த tipsகளை கடைப்பிடிக்க நீங்கள் நிறைய efforts போடவேண்டியிருக்கும். ஆனால் அநேக நேரங்களில் நாம், நம் சுய பெலத்தால் செய்ய நினைக்கும் காரியங்கள் தோல்வி அடைய வாய்ப்புகள் உண்டு. ஆதலால் இவை எல்லாவற்றிற்கும் மேலாக நீங்கள் கர்த்தரை சார்ந்து, பரிசுத்த ஆவியானவரின் துணையோடு ஜெபித்து, இந்த அடிமைத்தனத்தை மேற்கொள்ளும் போது நிச்சயமாக பூரண விடுதலை உண்டு.

அன்பு தங்கச்சி ஸ்னேகா! நீங்கள் முழுமனதோடு "இயேசுவே எனக்கு இந்த மொபைல் அடிமைத் தனத்திலிருந்து விடுதலை தாரும். என்னை விடுவிக்க உம்மால் மட்டுமே முடியும் என்று நான் விசுவாசிக்கிறேன். இத்தனை நாட்கள் என்னுடைய நேரத்தை நான் வீணாக கழித்து, சாட்சியில்லாமல் வாழ்ந்த வாழ்க்கையை மன்னியும்" என்று கேட்கும் பொழுது மெய்யான விடுதலையை நீங்கள் பெற்று கொள்ள முடியும். நீங்களும் சோதனையை வென்று சாதிக்க முடியும்!



"...குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்" (யோவான் 8:36)



முகப்பு செய்தி: சதீஷ்

# உயிர்த்தெழுந்தார்!

சீனாவில் வசிக்கும் கு கேங்டங் (Guo Gangtang ), வீட்டு வாசலில் விளையாடிக் கொண்டிருந்த தன் மகனை யாரோ ஒருவர் தூக்கிச் சென்று விட்டதால் தன் குழந்தையை தேட ஆரம்பித்தார். 20 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் இவர் தன் தேடுதல் வேட்டையை நிறுத்தவில்லை. தன் குழந்தையை





தேட ஆரம்பித்திலிருந்து 10 மோட்டார் சைக்கிள்களை மாற்றிய இவர், 5 லட்சம் கிலோ மீட்டர் தூரம் தன் குழந்தையைத் தேடி பிரயாணம் செய்தார். இவ்வளவு பிரயாசப்பட்டு, தன்னை வருத்தி, உறுதியான நம்பிக்கையுடன் தன் குழந்தையை தேடி அலைந்த அவரின் முயற்சி 2021ஆம் ஆண்டு வெற்றிபெற்றது. ஆம், 1997ஆம் ஆண்டு காணாமல் போன தன மகனை, 24 ஆண்டுகளுக்குப் பிறகு கண்டு பிடித்தார். இத்தனை ஆண்டுகளுக்கு பின் தங்கள் மகனை பார்த்ததும் கேங்டங்கும் அவரது மனைவியும் மகனை கட்டி அணைத்து கதறி அழுத காட்சிகளை YouTubeல் காணும்போது, ஒரு தகப்பனின் அன்பு எவ்வளவு வலிமையானது என்பதை உணர முடியும். கு கேங்டங் எப்படி தன் குழந்தையைத் தேடி அலைந்தாரோ, அதுபோலவே இயேசுவும் தன் சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் பாவம் செய்து தன்னை விட்டு போனபடியால் அவனைத் தேடி இந்த பூமிக்கு மனுஷ குமாரனாக வந்தார். ''இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்'' (லூக்கா 19:10).

எந்தவொரு மனிதனும் தன்னுடைய மரணத்தை அவ்வளவு எளிதில் விரும்புவதும் இல்லை, அதை சந்திக்கும் துணிச்சலும் இல்லை. "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23) என மரணத்தை எதிர்பார்த்து ஒவ்வொருநாளும் மரண பயத்துடன் செத்து பிழைத்துக் கொண்டு இருக்கிற எண்ணற்ற கைதிகள் இந்த உலகத்தில் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் செய்த பாவ காரியத்திற்கு தகுந்த தண்டனையை அவர்கள் கட்டாயம் அனுபவிக்க வேண்டும். அதிலிருந்து யாரும் தப்ப முடியாது. அப்படி தான் செய்த ஒரு கலகத்தினிமித்தமும் கொலை பாதகத்தினிமித்தமும் மரணத்தை எதிர்நோக்கி காத்து இருந்தான்

பரபாஸ் என்ற கைதி. அவனை விடுவிக்க ஒருவரும் இல்லை. அவனுடைய நாட்கள் எண்ணப்பட்டு கொண்டு இருந்தது, யார் என்னை விடுதலையாக்குவார்? என்று ஒவ்வொரு நாளும் மரண பயத்துடன் போராடிக் கொண்டிருந்தான். மரணத்தை நோக்கி போய்க் கொண்டிருந்த அவனுக்கு சற்றும் எதிர்பாராத வகையில் பரபாசை எங்களுக்கு விடுதலையாக்கும், இயேசுவை சிலுவையில் அறையும் என்ற சத்தம் கேட்டது. சிலுவையில் மரணத்தை சந்திக்க வேண்டிய பரபாஸ் இயேசுவால் விடுதலையாக்கப்பட்டான். அவனுக்குப் பதிலாக இயேசு சிலுவை மரணத்தை ஏற்றுக் கொண்டார். மரண தண்டனை கைதியாக இருந்த பரபாஸ் நீதிமானாக்கப்பட்டான். பரபாஸ் என்ற ஒரு தனிப்பட்ட மனிதனின் தண்டனையை மட்டும் இயேசு சிலுவையில் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த பூமியில் வாழும் ஒவ்வொரு மனிதனின் பாவத்திற்கு ஏற்ற தண்டனையை அவர் சிலுவையில் ஏற்றுக்கொண்டு மரணத்தை சந்தித்தார். மரணத்தை சந்தித்த இயேசு மரணத்தின் அதிபதியாகிய பிசாசை தன் மரணத்தினாலே ஜெயித்து, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தர். உயிர்த்தெழுந்த ஆண்டவர் இன்றும் ஜீவிக்கிறார். "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறேன்" என்றவர் பாவத்திற்கு மரித்துப்போன மனிதனை மீட்கும் மீட்பராக இருக்கிறார். "மனுஷகுமாரன் கெட்டுப் போனதை இரட்சிக்க வந்தார்" (மத் .18:11). உங்களுக்கு புரியும்படி சொல்லவேண்டுமானால் பிசாசினால் கெட்டுப் போன ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையையும் சரிசெய்யும் தெய்வமாக அவர் மனிதர்கள் மத்தியில் ஜீவனுள்ள தேவனாக உலாவிக் கொண்டிருக்கிறார். ஒருவேளை நீங்கள் கூட பாவத்திலும், தோல்வி பயத்திலும், எதிர்காலத்தைக் குறித்த கலக்கத்தினாலும், மரண பயத்திலும் ஒவ்வொருநாளும் மரித்துக் கொண்டு இருக்கிறீர்களானால், கலங்காதீர்கள்! மரணத்தை வென்ற இயேசு உயிரோடு இருக்கிறார். பாவத்திற்கு மரித்துப் போன உங்களை அவர் உயிர்ப்பிப்பார்.



வாரத்தின் முதல் நாள் அதிகாலையில், இயேசுவைத் தேடி கல்லறையை நோக்கி சென்ற மரியாளுக்கு, திறக்கப்பட்ட கல்லறை பெரும் அதிர்ச்சியைத் தந்தது. உடனே இச்செய்தியை சீஷர்கள் அனைவரிடமும் சொன்னாள். செய்தியை கேட்டவர்கள் இயேசுவின் கல்லறைக்குள் பிரவேசித்து பார்த்து விட்டு சென்றார்களேத் தவிர, இயேசுவின் சரீரத்தைக் காணவில்லை என்ற கவலை துளி அளவும் இல்லாமல் இருந்தார்கள். ஆனால் மரியாளோ, இயேசுவின் சரீரத்தை காணவில்லை என்ற ஏக்கம் நிறைந்த கண்களோடு கல்லறை அருகே நின்று கொண்டு இருந்தாள். இயேசுவுடன் ஊழியம் செய்த சீஷர்கள் எல்லோரும் இயேசுவை விட்டு விலகி ஓடிவிட்டனர். ஆனால் மரியாள் ஓடவில்லை. இயேசுவின் சரீரத்தை காண வேண்டும் என்று வாஞ்சையோடு இருந்தபடியால் உயிர்த்தெழுந்த இயேசு அவளுக்கு முதலில் தரிசனம் ஆனார். பாவி என்று சொல்லி இயேசு அவளை ஒதுக்கவில்லை. "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்..." (1 தீமோ. 1:15). மரியாள் தன்மீது உண்மையாய் அன்பு வைத்தபடியால் அவளுக்கு வெளிப்பட்டார். உயிர்த்தெழுந்த இயேசு இன்றும் ஜீவிக்கிறார். யார் எல்லாம் அவரை உண்மையாய் தேடுகிறார்களோ அவர்களுக்கு அவர் வெளிப்படுவார். நம்மை இரட்சிக்க இயேசு ஜீவனை கொடுப்பதே ஒரே வழி என்பதை அறிந்து, இயேசு நமக்காக மரித்தார். ஆனால் அவர் கல்லறையில் இருந்திருப்பாரேயானால் மீட்பு நமக்கு உண்டாகி இருக்காது. அவர் உயிர்தெழுந்ததினால் தான் பாவத்திற்கு மரித்துப்போன நாம் மீட்கப்பட்டு இருக்கிறோம்.

எனக்கன்பான வாலிபர்களே! நீங்கள் எப்படிப்பட்ட பாவ சூழ்நிலையில் இருந்தாலும், சரி இயேசு என்னுடைய பாவத்தை சிலுவையில் ஏற்றுக் கொண்டார் என்று அவரை விசுவாசித்து "...கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" (ரோமர் 10:9). கல்லறைத் திறந்து மனுக்குலத்தின் காரிருள் விலகின நாள் இயேசுவின் உயிர்த்தெழுந்த நாள் ■



# சிலுவையில் அறையப்பட்ட இயேசு!




செய்தி: மோகன் சி. லாசரஸ்

கிறிஸ்தவர்கள் இருக்கிற இடங்களில் எல்லாம் சிலுவையை பார்க்க முடியும். ஒரு ஆலயம் கட்டினால், அந்த ஆலயத்தினுடைய மேற்பகுதியில் சிலுவை வைக்கப்படுகிறது. நிறைய இடங்களில் ஆல்டர் பகுதியில் சிலுவை வைத்திருப்பார்கள். சிலுவை டாலர் வைத்த செயின் அணிந்திருப்பார்கள். இப்படி சிலுவையை பலவிதத்தில் பயன்படுத்துகிறோம். மரத்தினால் செய்யப்பட்ட சிலுவை, தங்கத்தினால் செய்யப்பட்ட சிலுவை, வெள்ளியினால் செய்யப்பட்ட சிலுவை என பலவிதங்களில் இருக்கிறது. குருத்தோலை ஞாயிறு அன்றும் அந்த ஓலையில் சிலுவை செய்து, அதையும் வீட்டில் வைத்துக் கொள்கிறோம். இப்படி எல்லா இடத்திலும் சிலுவையை நாம் பார்க்கிறோம். இந்த சிலுவை ஒரு அடையாளச் சின்னமே அல்லாமல், அது வணக்கத்திற்குரியது அல்ல. சிலுவையில் அறையப்பட்டு, அந்த சிலுவையில் இரத்தம் சிந்தி மரித்த இயேசு தான் முக்கியமானவர். ஆகவே தான் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை எல்லோருக்கும் அறிவிக்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

## சிலுவை நமக்கு எதை வெளிப்படுத்துகிறது?

**பாவம் எத்தனை பயங்கரமானது என்பதை சிலுவை வெளிப்படுத்துகிறது.** பாவத்தினுடைய வல்லமையை, பாவத்தினுடைய பயங்கரத்தை அது வெளிப்படுத்துகிறது. ஆகவே, சிலுவையைப் பார்க்கும் போது, நம்முடைய பாவம் எவ்வளவு பயங்கரமானது என்பதை உணர வேண்டும். அதற்கு தான் அந்த சிலுவையை அடையாளமாக ஆலயங்களிலும், வீடுகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ரோமருடைய ஆட்சி காலத்தில் கொலையும், கொள்ளையும் செய்யக் கூடியவர்களுக்கும், அரசாங்கத்திற்கு விரோதமாய் கலகம் செய்கிறவர்களுக்கும், கொடிதான குற்றம் செய்கிறவர்களுக்கும் ரோம அரசாங்கம் கொடுக்கிற ஒரு மரண தண்டனை தான் சிலுவை மரணம். அந்த அரசாங்கம் ஒரு மனிதனை சிலுவையில் அறைய ஒப்புக்கொடுத்து விட்டால், அவனை மனம்போல் அடித்து, வேதனைப்படுத்தி, அவனுடைய வஸ்திரங்களை களைந்து, சிலுவையில் ஆணி அடித்து தொங்க விட்டு விடுவார்கள். இரத்தம் கொஞ்ச கொஞ்சமாய் வடிய வடிய, அவன் நரக வேதனை அனுபவித்து, தன் ஜீவனை வெறுத்து மரணமடைவான். அப்படிப்பட்ட கொடிதான மரணம் தான் சிலுவை மரணம். அப்படியானால் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவன், நம்மை சிருஷ்டித்த தேவன், ஏன் அந்த சிலுவையில் தொங்க வேண்டும்? அவர் என்ன தவறு செய்தார்? அவர் என்ன பாவம் செய்தார்? ஏன் அரசாங்கம் அவருக்கு அந்த தண்டனை கொடுத்தது? அவர் பாவமும் செய்யவில்லை, அவர் குற்றமும் செய்யவில்லை, அவர் குற்றம் செய்தார் என்பதற்காக சிலுவையில் அறையப்படவில்லை. நாம் செய்த பாவத்திற்காக, நாம் செய்த அக்கிரமத்திற்காக, நம்முடைய மீறுதலுக்காக அவர் சிலுவையில் அறையப்பட்டார் என்று வேதம் தெளிவாக சொல்கிறது.

அன்பான வாலிப மகனே, மகளே! உன்னுடைய, என்னுடைய பாவத்திற்காக அவர் சிலுவையில் தொங்க தன்னை ஒப்புக்கொடுத்தார். அவர் பாவம் செய்யவில்லை, அவரிடத்தில் எந்தக் குற்றமும் காணமுடியவில்லை. ஒருவரும் அவர் குற்றவாளி என்று சொல்ல முடியவில்லை.





ஆனால் அவர் குற்றவாளியை போல், குற்றம் சாட்டப்பட்டவராய் தொங்கிக் கொண்டிருக்கிறார். நம்முடைய பாவங்கள், நம்முடைய அக்கிரமங்கள் பரிசுத்தமுள்ள தேவனை சிலுவைக்கு கொண்டு சென்றது. அந்த பாவம் எவ்வளவு பயங்கரமானது என்பதை சிலுவை நமக்கு காண்பிக்கிறது. பாவமே செய்யாத பரிசுத்தமுள்ள தேவனை நம்முடைய அக்கிரம், நம்முடைய பாவம் தான் அவரை சிலுவைக்கு கொண்டு சென்றது. அந்த சிலுவையை பார்க்கும் போதெல்லாம் பாவம் எத்தனை பயங்கரமானது, என்பதை உணர வேண்டும். பரிசுத்தமுள்ள தேவனை கள்ளர்களுக்கு நடுவிலே ஒரு கள்ளனைப்போல தொங்க வைத்து விட்டது. உம்முடைய இரத்தத்தினால் என் பாவத்தை கழுவும் என்று ஒப்புக்கொடுத்தீர்களானால் அவருடைய இரத்தம் உங்கள் பாவங்களை கழுவி சுத்திகரிக்கும்.

எனக்கு ஒரு ஊழியக்காரரைத் தெரியும். அவர் வேலை பார்த்துக் கொண்டே, ஊழியமும் செய்து வந்தார். ஒருநாள் தேவ சமுகத்தில் அமர்ந்து தியானித்துக் கொண்டிருந்த போது கைகளில், கால்களில் ஆணி அடிக்கப்பட்டு, தலையில் முள்முடி சூட்டப்பட்டு முகமெல்லாம் இரத்தத்தோடு, இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கிறார். அப்போது, ஒரு கருப்பு உருவம் வருகிறது, அது ஒரு மனிதன் என்று தெரிகிறது. ஆனால் முகம் சரியாக தெரியவில்லை. அது வந்து சிலுவையில் தொங்குகிற இயேசுவினுடைய சரீரத்தை அசைக்கிறது. அசைக்கும் போது, சொல்ல முடியாத ஒரு வேதனை இயேசுவின் முகத்தில் தெரிகிறது. கொஞ்ச நேரத்தில் அவன் ஓடிப்போகிறான். மறுபடியும் அவன் கொஞ்ச நேரத்தில் திரும்ப வந்து, சிலுவையில் தொங்கும் இயேசுவின் சரீரத்தை அசைக்கிறான். சரீரத்தை அசைக்கும் போது இயேசுவால் இன்னும் தாங்க முடியாத வேதனை. இரண்டு மூன்று முறை வந்து இப்படியே செய்கிறதை அவர் தரிசனத்தில் பார்த்தவுடனே, இவர் கோபத்தோடு சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கிற இயேசுவைப் பார்த்து, உம்மை அசைத்து, அசைத்து திரும்ப திரும்ப வேதனைப் படுத்துகிறானே யார் அந்த மனிதன்? என்று இவர் கோபத்தோடு கேட்கிறார். அதற்கு, நீ தான் அந்த மனிதன். நீ மறுபடியும் மறுபடியும் பாவம் செய்யும் போதெல்லாம் என்னை அப்படித்தான் சிலுவையில் வேதனைப்படுத்துகிறான் என்பது உனக்கு தெரியுமா? என்று கர்த்தர் சொன்னார். உள்ளம் உடைந்து கதறினார். இனிமேல் சிலுவையில் தொங்குகிற உம்மை வேதனைப்படுத்தமாட்டேன் என்று தன்னை ஒப்புக்கொடுத்து அழுத போது, 'என் கைகள் பாவங்கள் செய்திட்டால், தம் கையின் காயங்கள் பார்க்கின்றாரே, தீய வழிகளில் கால்கள் சென்றால் தம் காலின் காயங்கள் பார்க்கின்றாரே, என்கிறதான அருமையான பாடலை தேவன் கொடுத்தார்.

**தேவனுடைய அன்பு எத்தனை பெரியது என்பதை அந்த சிலுவை வெளிப்படுத்துகிறது.** வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவன் மனிதர்களாகிய நம்மீது வைத்த அன்பு எவ்வளவு பெரியது என்பதை சிலுவை நமக்கு வெளிப்படுத்துகிறது. "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" (ரோமர் 5:8) என்று வேத வசனம் சொல்கிறது. 1 யோவான் 4:10ம் வசனத்தில், நாம் பாவம் செய்து தேவ மகிமையற்ற போது, தேவன் தம்முடைய குமாரனை ஜீவபலியாக சிலுவையில் ஒப்புக்கொடுத்து, தன்னுடைய அன்பை நமக்கு வெளிப்படுத்தினார் என்று வேத வசனம் சொல்கிறது. நம்மீது கர்த்தர் வைத்த அன்பு எத்தனை பெரியது என்பதை அறிய வேண்டுமானால், அந்த சிலுவைக்கு முன்னால் போய் நிற்க வேண்டும். அந்த சிலுவையில் தொங்குகிற இயேசுவுக்கு முன்னால் போய் நிற்கும் போது, அவர் நம்மீது வைத்திருக்கிற அன்பை நம்மால் விளங்கிக் கொள்ள முடியும்.



அந்த சிலுவையில் அவருடைய அன்பைப் பார்க்க முடியும். அவருடைய அன்பு அந்த சிலுவையில் வெளிப்படுத்தியது. தன்னையே பலியாகக் கொடுத்து, நம்முடைய பாவ பலியை தன்மேல் ஏற்றுக் கொண்டு, நமக்கு பாவ மன்னிப்பின் நிச்சயத்தைக் கொடுத்து, மகனே, மகளே என்று கூப்பிடுகிற பெரிய பாக்கியத்தை நாம் பெற்றிருக்கிறோம். எவ்வளவு பெரிய பாக்கியம்! அந்த அன்புக்கு ஈடாக நம்மால் என்னத்தை செய்ய முடியும்? நம்முடைய பாவத்தை மன்னிக்க சிலுவையில் பாவமாக்கப்பட்டாரே, அந்த சிலுவை, தேவனுடைய அன்பை நமக்கு வெளிப்படுத்துகிறது. நம்மீது வைத்த அன்பின் நிமித்தம் பிதாவாகிய தேவன் தன்னுடைய குமாரனாகிய இயேசுவை சிலுவையில் மரிப்பதற்கு ஒப்புக்கொடுத்தார். அவர் சிந்தின இரத்தம், சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கிறது.

அன்பான வாலிபர்களே! நீங்கள் எவ்வளவு பெரிய பாவத்தில் அகப்பட்டிருந்தாலும், எவ்வளவு பெரிய பாவத்தை செய்து குற்ற மனசாட்சியோடு, என் பாவம் மன்னிக்கப்படுமா என்று கலக்கத்தோடு இருந்தாலும், இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் உங்களை கழுவி சுத்திகரிக்க ஆயத்தமாக இருக்கிறது. நான் இனி பாவம் செய்யக் கூடாது. இயேசுவை மறுபடியும் மறுபடியும் சிலுவையில் அறைந்து துக்கப்படுத்தக் கூடாது. நான் எப்போதும் பரிசுத்தமுள்ள வாழ்க்கை வாழ வேண்டும் என்று அந்த சிலுவையின் அருகில் வந்து இயேசுவின் பரிசுத்தமுள்ள இரத்தத்திற்குள் ஒப்புக்கொடுங்கள். சிலுவையில் அறையப்பட்ட இயேசு உங்கள் பாவங்களை மன்னிப்பார் ■

சாதனை: சுமா

# ஸ்டீல் கிங்...

## இந்தியாவிலிருந்து இந்தோனேஷியா வரை


லட்சுமி மிட்டல்

இளம் சாதனையாளர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள். நம்முடைய வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு காரியங்களும் ஏதோ ஒரு பாடத்தை நமக்கு கற்றுக் கொடுத்துக் கொண்டே இருக்கின்றன. நாம் கற்றுக் கொள்ளும் இந்த பாடங்கள் நம்மை செதுக்கி, அழகான வடிவத்தை கொடுத்து அநேகர் பார்த்து வியக்கும் வண்ணம் நம்மை உருவாக்குகின்றது. இன்னும் உங்கள் வாழ்க்கையை அழகாக்க ஒரு சாதனையாளரின் வாழ்க்கை இதோ உங்கள் முன்!!!

சாதாரண நடுத்தர குடும்பத்தில் 1950ஆம் ஆண்டு ஜுன் 15ம் தேதி ராஜஸ்தான் மாநிலத்தில் பிறந்தவர் லட்சுமி மிட்டல். தன் இளமை காலத்தில் மிகவும் எளிமையான வாழ்க்கையை வாழ்ந்தார். லட்சுமி மிட்டல் மிகவும் கூச்ச சுபாவம் கொண்டவர். இதனால் அநேகரிடம் பேச மிகவும் தயங்குவார். சிறுவயதில் ஹிந்தி மீடியம் பள்ளியில் பள்ளிப் படிப்பை முடித்தார். இதனால் கல்லூரியில் படிக்கும்போது சரளமாக ஆங்கிலத்தில் இவரால் பேச முடியாமல் தவித்தார். இந்த காரணத்தால் தாழ்வுமனப்பான்மை இவரிடம் மேலோங்கி காணப்பட்டது. அநேக படிப்புகள் படித்து பட்டம் பெற வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஆனால் இவரால் B.Com மட்டுமே படிக்க முடிந்தது.



லட்சுமி மிட்டலின் தந்தை ஒரு ஸ்டீல் கம்பெனியில் பார்ட்னராக இருந்ததால், பள்ளிப் படிப்பை முடித்தவுடன் லட்சுமி மிட்டலின் குடும்பம் கல்கத்தாவிற்கு குடியேறினார்கள். லட்சுமி மிட்டல் கல்லூரியில் படிக்கும் போதே தினமும் குறைந்தது 15 மணி நேரம் தனது தந்தையின் இரும்பு ஆலையில் வேலைச் செய்வார். கடினமாக உழைக்கத் தொடங்கினார். இந்நிலையில் இந்தியாவில் ஸ்டீல் உற்பத்திக்கு தடை விதிக்கப்பட்டது. திடீரென்று தடை விதித்து விட்டார்களே, வேறொரு தொழிலைப் பார்க்கலாம் என்று லட்சுமி மிட்டல் எண்ணாமல், அடுத்து என்ன செய்வது என்று பல முறை சிந்தித்து இந்தோனேசியா நாட்டில் ஸ்டீல் உற்பத்தி ஆலை ஒன்றை வாங்கி அதைப் புதுப்பித்து ஸ்டீல் உற்பத்தியில் ஈடுபட்டார். இதில் மிகப்பெரிய வெற்றியைக் கண்டார். ஸ்டீல் உற்பத்தியில் உலகையே திரும்பி பார்க்க வைத்தார். மிட்டலின் தொழில் கொஞ்சம் கொஞ்சமாக அனைத்து நாடுகளுக்கும் பரவியது. ஒன்றரை லட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு தனது ஆலைகளில் வேலை வாய்ப்பை வழங்கினார். விடாப்பிடியான முயற்சி, அயராத தன்னம்பிக்கையினால் ''மிட்டல் ஸ்டீல் கிங்'' என்ற பெயரில் அழைக்கப்பட்டார்.



2004ம் ஆண்டில் 42.1 மில்லியன் டன் ஸ்டீல் உற்பத்தி செய்து, உலகின் மிகப் பெரிய ஸ்டீல் உற்பத்தி நிறுவனமாக மிட்டல் ஸ்டீல் மாறியது. இந்த நிறுவனம் 22 பில்லியன் டாலருக்கு மேல் லாபம் ஈட்டியது. தனக்குப் போட்டியாக வந்த ஏர்செலர் நிறுவனத்தையும் வாங்கி ஏர்செலர் மிட்டல் என்ற பெயரில் உலகின் மிகப்பெரிய ஸ்டீல் நிறுவனமாக உருவாக்கினார். இப்பொழுது ஆண்டுக்கு 70 மில்லியன் டன் ஸ்டீல் உற்பத்தி செய்து உலகின் மிகப்பெரிய உற்பத்தி நிறுவனமாக இயங்கி வருகிறது.

இந்திய அரசின் பத்ம விபூஷண் விருது, யூரோப்பியன் பிசினஸ் மேன் ஆஃப் தி இயர் 2004, ஸ்டீல் மேக்கர் ஆஃப்தி இயர் 1996 இதுப்போன்ற பல்வேறு





விருதுகளை இவர் பெற்றுள்ளார். உலகின் மிகப்பெரிய பணக்காரர்களில் ஒருவராக இருந்து வருகிறார். இந்தியாவில் பிறந்து இங்கிலாந்தில் வசித்து வரும் இவர் ஸ்டீல் உற்பத்தியில் பல்வேறு நாடுகளில் முன்னிலை வசிக்கிறார்.

இதை வாசிக்கின்ற இளம் சாதனையாளர்களே! மனம் தளராதீர்கள், லட்சுமி மிட்டல் மிக எளிதாக உயரவில்லை. கூச்ச சுபாவம் கொண்டவர், தாழ்வு மனப்பான்மை கொண்ட இவர், தனது வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் எல்லாவற்றையும் ஒதுக்கி, கடினமாக உழைத்து பலத் தடைகளைத் தாண்டி, பல வெற்றிகளைக் கண்டார். நீங்களும் கடினமாக உழைத்து, நேரத்தை சரியாக பயன்படுத்தி முயற்சி செய்யும் போது, உலகம் திரும்பி பார்க்கும் நபராக மாற முடியும். வெற்றி உங்களுக்காக காத்துக் கொண்டு இருக்கிறது. தவறவிடாதீர்கள்! ■

# கோடைக்காலம் சேர்க்க வேண்டிய பழங்கள்

நாளொன்றுக்கு பரிந்துரைக்கப்பட்ட அளவு தண்ணீரை குடிக்க முடியாதவர்களுக்கு நீர்ச்சத்து மிக்க பழங்கள் பெரிதும் உதவும். இது உங்களை ஊட்டமாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்கும்.



**மாம்பழம்:** ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள் நிறைந்திருப்பதால் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, கண் ஆரோக்கியத்தையும் மேம்படுத்தும்.



**தர்பூசணி:** சுமார் 90 சதவீதம் நீரை கொண்டுள்ள இந்த பழம் இதய நோய்களைத் தடுக்க உதவுவதோடு நோயெதிர்ப்பு மண்டலத்தின் ஆரோக்கிய செயல்பாட்டிற்கு உதவுகிறது.



**அன்னாசி பழம்:** நார்ச்சத்து நிறைந்த மற்றும் குறைந்த கலோரி கொண்ட அன்னாசி சருமத்தில் கொலாஜின் உற்பத்தியை அதிகரிக்க உதவும்.



**ஆரஞ்சு:** நம் உடலை ஹைட்ரேட் செய்து உற்சாகமாக வைப்பதில் ஆரஞ்சு பழத்தின் பங்கு முக்கியமானது. இதில் அதிக அளவு வைட்டமின் சி இருப்பதால் சரும ஆரோக்கியமும் சிறப்பாக இருக்கும்.

# ஒலிவ மலை

அன்பு இளம் வாலிபர்களே! ஒவ்வொரு மாதமும் வேதாகம தேசங்கள் என்ற தலைப்பில் வேதத்தில் உள்ள தேசங்கள் பற்றி பார்த்து வருகிறோம். கடந்த மாதம் "பெத்தேல்" பற்றி அநேகக் காரியங்களை தெரிந்து கொண்டீர்கள் என்று நம்புகிறேன். அந்த வகையில் இம்மாதம் 'ஒலிவ மலை' பற்றி பார்க்கப் போகிறோம்.

*எருசலேமின் கிழக்கே ஒரு நீண்ட மலைப் பகுதியில் உள்ள 3 மலைகளில் ஒன்றாகும். இது பல வேதாகம நிகழ்வுகளின் இருப்பிடமாகும். "Mount Olive" என்று அழைக்கப்படும் இந்த மலை, ஒரு காலத்தில் ஆலிவ் மரங்களால் மூடப்பட்டிருந்ததால் ஒலிவ மலை என்ற பெயரைப் பெற்றது.*

வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒலிவ மலை நிகழ்வுகள்!

## பழைய ஏற்பாடு:

- தாவீது அப்சலோமுக்குப் பயந்து ஒலிவ மலையின் மீது ஏறி தப்பிப் போகிறார் (2 சாமு. 15:30).
- இந்த மலையின் தெற்குப் பக்கமாக உள்ள சிகரத்தில் சாலொமோன், காமோசுக்கும் மோளோகுக்கும் மேடைகள் கட்டினதினிமித்தம் ''இடறலின் மலை'' என்று ஒலிவ மலைக்கு பெயர் வந்தது (1 இராஜா. 11:7; 2 இராஜா. 23:13).
- எசேக்கியேல் – ''கர்த்தருடைய மகிமை'' நகரத்திலிருந்து ஏறி ஒலிவ மலையில் நிற்கும் தரிசனத்தைக் கண்டார் (எசே. 11:23).

## புதிய ஏற்பாடு

- இயேசு கிறிஸ்து கழுதையின் மேல் ஏறி ஒலிவ மலையின் அடிவாரத்தின் வழியாக எருசலேமுக்கு வந்தபோது, அந்த நகரத்துக்காக கண்ணீர் விட்டார்.
- கெத்சமனே தோட்டம் இந்த மலைக்கு அடியிலிருந்தது.
- தம்முடைய சீஷர்களுக்கு தனது இரண்டாம் வருகையை இங்குதான் முன்னறிவித்தார் (மத். 24:27-31).
- இயேசு கைது செய்யப்படுவதற்கு முந்தைய நாள் இரவு தனது சீஷர்களுடன் இங்கு ஜெபம் செய்தார் (மத். 26:30-56).

## முக்கிய ஸ்தலங்கள்!

- சர்ச் ஆஃப் ஆல் நேஷன்ஸ்
- சர்ச் ஆஃப் டோமினஸ் ஃப்ளெவிட்
- சர்ச் ஆஃப் பேட்டர் நோஸ்டர்
- டோம் ஆஃப் தி அசென்ஷன்
- கெத்செமனே தோட்டம் மற்றும் க்ரோட்டோ (குகை)

## ஒலிவ மலையின் தீர்க்கதரிசனம்!

''அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின்மேல் நிற்கும்; அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன் நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்துபோம்; அதினாலே, ஒரு பாதி வடபக்கத்திலும் ஒரு பாதி தென்பக்கத்திலும் சாயும்'' (சகரியா 14:4).

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இந்த வசனத்தின்படி ஒலிவ மலையில் சில மாற்றங்கள் நடந்துள்ளன. 1964ம் ஆண்டு நடைபெற்ற ஆராய்ச்சியில் இந்த ஒலிவ மலையில் பிளவு உண்டாகியிருப்பதை அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டுப்பிடித்துள்ளனர். அது என்னவென்றால், ஒலிவ மலையின் கிழக்கு மேற்கு பகுதிகளுக்கு எதிராக பிளவு ஏற்பட்டுள்ளதால், அங்கே கட்டிடங்கள் கட்டுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. ■



சிறப்புக் கட்டுரை: ரவி

# உயிர்த்தெழுந்த இயேசு!

என் அன்பு தம்பி, தங்கைகளே! ஒவ்வொரு மாதமும் நாம் ஒவ்வொரு தலைப்பில் அநேகக் காரியங்களைப் பார்த்து வருகிறோம். அந்த வகையில் இந்த மாதம் இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றி இக்கட்டுரையில் பார்க்கவிருக்கிறோம். ஆம், இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவர்கள் 'ஈஸ்டர்' ஞாயிறு என்கிற பெயரில் கொண்டாடுவது வழக்கமாக இருக்கிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உயிரித்தெழுதல் எத்தனை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் குறித்தும், விசுவாசிகளாகிய நமக்கு இவ்வுலகத்தில் இயேசுவின் சாட்சிகளாய் வாழ்வதற்கு அவ்வுயிர்த்தெழுதலின் வல்லமை எவ்வளவு முக்கியம் என்பதைக் குறித்தும் ஆராய்வோம் வாருங்கள்.

கர்த்தராகிய இயேசு இப்பூமியில் வாழ்ந்த நாட்களில், தாம் அடையப் போகும் சிலுவை மரணம் குறித்தும், பின்பு மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுவதைக் குறித்தும் மிக தெளிவாக குறிப்பிட்டிருந்தார். அதன்படி அவரைப் பின்பற்றி நடந்த சில சீஷிகள் ஓய்வுநாள் காலையில் அவருடைய சடலத்தை காணப்போன இடத்தில் மின்னல் போல பிரகாசமுள்ள வஸ்திரந்தரித்த இரண்டு பேர் அந்த ஸ்திரீகளைப் பார்த்து, ''உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிற தென்ன'' (லூக்கா 24:5) என்று கேட்கின்றனர். ஆம் நண்பர்களே, இயேசு உயிர்த்தெழுந்தார்! அவரை வைத்த கல்லறை இன்று வரை வெறுமையாகவே உள்ளது. இயேசுவின் உயிர்த்தெழுதல் அவர் தேவனுடைய குமாரன் என்கிற சத்தியத்தை நிரூபிப்பது மாத்திரம் அல்லாமல், எல்லாம் முடிந்தது என்று நம்பிக்கையிழந்த நிலையில் இருந்த அவருடைய சீஷர்களுக்கு நித்திய நம்பிக்கையை கொடுத்தது. ஆம், இயேசுவின் உயிர்த்தெழுதல் இல்லையென்றால் நம்முடைய விசுவாசம் விருதாவென்றும், நாம் இன்னும் நம்முடைய பாவங்களில் இருப்போம் என்றும் பவுலடிகள் 1 கொரிந்தியர் 15ம் அதிகாரத்தில் சொல்லியிருக்கிறார்.

ஆம் நண்பர்களே, பல நேரங்களில் உயிர்த்தெழுந்த இயேசுவை நாம் அந்த ஸ்திரீகளைப்போல மரித்தோரிடத்தில் தேடுகிறோம். இல்லை, அவர் இன்றும் பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்ந்திருந்து நமக்காக வேண்டுதல் செய்து கொண்டிருக்கிறார். ''...இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்'' (மத்தேயு 28:20) என்று அவர் சொன்ன வாக்கு. இன்றும் ஜீவனோடு நம் மத்தியில் இருக்கிறார் என்பதை உறுதிபடுத்துகிறது. அதுவுமல்லாமல் அவ்வுயிர்த்தெழுதலின் வல்லமையை விசுவாசிக் கிறவர்களாகிய நம்மிடத்தில் காண்பிக்கும்படியும், அவ்வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நாம் அறிய வேண்டுமென்று பவுலடிகள் எபேசியர் 1:19ல், தேவனிடத்தில் வேண்டுகிறார். நாம் இப்பூமியில் இயேசுவின் மாதிரியை பின்பற்ற அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமை மிகவும் அவசியம். நீங்கள் படிக்கும் பள்ளி மற்றும் கல்லூரிகளிலும், வேலை செய்யும் இடங்களில் இச்சைகளையும், பாவ எண்ணங்களையும், செயல்களையும் நமக்குள் தூண்டும் சூழ்நிலைகள் வரும்போது நாம் அவ்விச்சைகளை மேற்கொள்ள இயேசுவின் உயிர்த்தெழுதலின் வல்லமை அவசியம். இவ்வல்லமை விசுவாசிக்கிற ஒவ்வொருவருக்கும் வைக்கப்பட்டிருப்பதாக வேதம் கூறுகிறது. ''அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்'' (ரோமர் 8:11) என்று சொல்கிறது.



என் அன்பு தம்பி, தங்கச்சி!
இயேசுவை உயிர்த்தெழப்பண்ணின
தேவ ஆவியானவர் நமக்குள் வசிக்கிறார்.
அந்த ஆவியானவர் மேன்மேலும் உங்களில்
பெருகும்படியும், அவருடைய உயிர்த்தெழுதலின்
வல்லமையை உங்கள் அனுதின வாழ்வில் நீங்கள்
பயன்படுத்தி ஜெயமுள்ள கிறிஸ்தவ வாலிபர்களாகத்
திகழ வேண்டுமென்றும் தேவனை
வேண்டிக் கொள்கிறேன்.





# எழுப்புதலை பற்ற வைப்போர் முகாம் 2023

(மஹாராஷ்டிரா. மத்திய பிரதேசம். குஜராத் மற்றும் இராஜஸ்தான்)





யௌவன சந்ததியை எழுப்புவேன் என்று கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தத்தின்படியே 2021, 2022ம் ஆண்டுகளில் தமிழ்நாடு, கிழக்கிந்திய மாநிலங்கள், கர்நாடகா, கேரளா, ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களில் இருந்து சுமார் 9000க்கும் அதிகமான வாலிபர்கள் நாலுமாவடிக்கு வந்து எழுப்புதலைக் குறித்த தரிசனத்தையும், பாரத்தையும் பெற்றுக் கொண்டு தாங்கள் படிக்கும் பள்ளிக் கல்லூரிகளிலும், தாங்கள் வசிக்கும் கிராமங்களிலும் எழுப்புதலை பரவச் செய்வோம் என்று எடுத்த தீர்மானத்தின்படி எழுப்புதல் அக்கினியை பற்ற வைத்து கொண்டிருக்கிறார்கள். அதுபோல வட இந்திய மாநிலங்களான மஹாராஷ்டிரா, குஜராத், மத்திய பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் மாநிலங்களில் உள்ள வாலிபர்களும் எழுப்புதல் அக்கினியைப் பரவச் செய்கிறவர்களாக மாற வேண்டுமென்ற கர்த்தருடைய தீர்மானத்தின்படி கடந்த பிப்ரவரி 14, 15, 16 ஆகிய தேதிகளில் சுமார் 1155க்கும் மேலான வாலிப சகோதர, சகோதரிகள் நாலுமாவடிக்கு வந்து எழுப்புதல் தரிசனத்தை பெற்றுக் கொண்டு சென்றுள்ளனர். இதில் தேவ ஊழியர்கள் சகோ. மோகன் சி.லாசரஸ் மற்றும் சகோ. வின்சென்ட் செல்வக்குமார் அவர்களும் எழுப்புதலைக் குறித்த தரிசனத்தையும், எழுப்புதலில் வாலிபர்களின் பங்கு எவ்வளவு முக்கியம் என்பதையும் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். வந்திருந்த அனைவரையும் தேவன் எழுப்புதலின் தரிசனத்தினால் நிரப்பி, அளவில்லாத அபிஷேகத்தையும் கொடுத்து அனுப்பினார். பாடல் ஆராதனை வேளையை சகோ. மாற்கு குழுவினர் மற்றும் சகோ. ஜாண் எபினேசர் குழுவினர் நடத்தினார்கள். சகோ. பெராக்கா மற்றும் சகோ. ரவி அவர்கள் ஹிந்தி மொழியில் மொழிபெயர்த்து உதவினார்கள். வந்திருந்த அனைவரும் எழுப்புதலை பரவச் செய்வோம் என்ற தீர்மானத்துடன் கடந்து சென்றனர். தேவனுக்கே மகிமை!






Revival
IGNITERS




# வசன எழுப்புதல்!

உலகில் சுமார் 3350 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட புத்தகம் தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய வேத புத்தகமே. வேத வசனத்தின் மூலம் ஒவ்வொரு கால கட்டத்திலும் எழுப்புதல் உண்டாகி இருப்பதை யாராலும் மறுக்க முடியாது. தேவனே எழுப்புதலைத் தருகிறவர். எழுப்புதலின் போது ஜனங்கள் திரளாக கிறிஸ்துவிடம் திருப்பப்படுகிறார்கள். பல வருடங்களாக பதிலளிக்கப்படாத ஜெபங்கள்கூட எழுப்புதலின் காலங்களில் மகிமையாய் பதிலளிக்கப்படும். வழி விலகி போன ஜனங்களை ஆண்டவர் தம்முடைய வார்த்தையின் மூலம் தன் பக்கம் திருப்புகிறார்.

எழுப்புதல் செய்தி: சதீஷ்



நேபுகாத்நேச்சார் நாட்களில் யூதா, எருசலேமில் இருந்து ஜனங்களை பாபிலோனுக்கு அடிமைகளாக சிறைபிடித்து கொண்டு போகப்பட்டார்கள். 70 வருடங்களுக்கு பின்பு பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் ஆவியை கர்த்தர் ஏவினதினால் இடிந்து போன எருசலேமின் ஆலயத்தைக்கட்ட பாபிலோனிலிருந்து ஆட்களை அனுப்பினான். இவர்களோடு புறப்பட்ட எஸ்றா என்னும் வேதபாரகன் ஆண்டவருக்கு முன்பாக நின்று விண்ணப்பம் செய்த போது, "...இஸ்ரவேல் புருஷரும் ஸ்திரீகளும் பிள்ளைகளுமான மகா பெரிய சபை அவனிடத்தில் வந்து கூடிற்று; ஜனங்கள் மிகவும் அழுதார்கள்" (எஸ்றா 10:1). அப்பொழுது ஏலாமின் புத்திரரில் ஒருவனாகிய யெகியேலின் குமாரன் செக்கனியா எஸ்றாவை நோக்கி: நாங்கள் தேசத்திலுள்ள அந்நிய ஸ்தீரிகளோடு சேர்ந்து தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்தோம் என்று அறிக்கையிட்டு மனம் திரும்பினார்கள். இவ்விதமாய் ஆண்டவர் எஸ்றா என்ற தேவ மனிதரை கொண்டு பாவத்தில் விழுந்து போன தன்னுடைய ஜனங்களை தன் பக்கமாக திருப்பினார்.



இயேசுவின் ஊழிய நாட்களில் அவர் எங்கெல்லாம் திரளான ஜனங்களை சந்தித்தாரோ, "...அவர்களுக்கு வசனத்தைப் போதித்தார்" (மாற்கு 2:2). வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர், மனந்திரும்பி இயேசுக்குப்பின் சென்றனர். "விழுகிறவனை உம்முடைய வார்த்தைகளால் நிற்கப்பண்ணி, தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்தினீர்" (யோபு 4:4) என்ற வேத வாக்கியம் எவ்வளவு உண்மையுள்ளதாக இருக்கிறது. பாவத்தில் விழுந்து போன அநேகரை ஆண்டவரின் வார்த்தை மனந்திரும்ப செய்கிறது.



இயேசுவுக்கு பின்பு ஆதி அப்போஸ்தலர்கள் வைராக்கியத்தோடு ஆண்டவரின் வார்த்தையை பிரசங்கித்தனர். முதல் சீஷனாகிய பேதுரு பேசும் போது இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி ஏறக்குறைய 3000 பேர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டனர். பின்பு இது 5000ஆக மாறியது. இவ்விதமாக வேத வசனமானது விருத்தியடைந்து எருசலேமை சுற்றி இருக்கிற பட்டணங்களில் பிரசித்திப்பட்டது. வார்த்தையைக் கேட்ட திரளான ஜனங்கள் கர்த்தர் பக்கமாக திருப்பப் பட்டனர்.

அமெரிக்காவின் எழுப்புதலில் முக்கிய பங்கு வகித்தவர் Dr. பில்லிகிரஹாம். இவருடைய கூட்டங்களில் அநேக அற்புதங்களும், தீர்க்கதரிசனங்களும் இல்லாமல் போனாலும் இவருடைய எல்லா பிரசங்கங்களிலும் "வேத வசனம் இப்படியாக சொல்கிறது" என்று வேத வசனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து பிரசங்கம் செய்வார். வசனத்தை கேட்டவர்களில் ஏராளமானோர் மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக் கொண்டுள்ளனர். இவர் போன எல்லா இடங்களிலும் ஒரு மாபெரும் வசன எழுப்புதல் உண்டாகி திரளான ஜனங்கள் இரட்சிக்கப்பட்டனர்.



*எனக்கன்பான வாலிபர்களே! ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தைகள் எவ்வளவு வல்லமையுள்ளது என்பதை பார்த்தீர்களா? குதூகலமான பாடலுக்கும் இசைக்கும் மயங்கிப் போன வாலிபர்கள் மத்தியில், நீங்கள் எழும்பி ஆண்டவரின் வார்த்தையை அறிவிக்க ஆரம்பித்தால், அந்த வார்த்தைகள் பாவத்தில் விழுந்து சோர்ந்து போன அநேகரை மனந்திரும்ப செய்யும். நீங்கள் எங்கெல்லாம் ஆண்டவரின் வார்த்தையை அறிவிக்கிறீர்களோ, அங்கெல்லாம் ஒரு மாபெரும் எழுப்புதல் உண்டாகும். தாமதம் செய்யாமல் இன்றே உங்களைச் சுற்றி இருக்கிற ஜனங்கள் மத்தியில், இயேசுவின் வார்த்தைகளை அறிவிக்க ஆரம்பியுங்கள். உங்கள் மூலம் வேத வசனம் விருத்தியடைவதைப் பார்ப்பீர்கள் ■*

சிறப்பு கட்டுரை: கெத்சி கிளாரின்



# எரிகோ மதிலும்

## கர்த்தரின் அசாதாரணமான திட்டமும்!

## யோசனையில் பெரியவர்!

இரட்டை சுவர்களால் பாதுகாக்கப்பட்ட அதிக பலம் வாய்ந்த மதிலை 7 நாட்கள் சுற்றி வந்தால் இடிந்து விழுமா?

ஆம் விழும் ! ஏனென்றால், தனக்குப் பிரியமான ஜனங்களைத் தடுப்பது எதுவாயினும் அதைத் தகர்த்து போடுகிறவர் நம் தேவன்.

அன்பு வாலிபர்களே ! இஸ்ரவேலர்களுக்கு எதிராய் அடைக்கப்பட்டிருந்த எரிகோவின் மதில் சுவர் யுத்தமின்றி, எந்தவொரு தாக்குதல்களின்றி விழுவதற்கு கர்த்தர் செய்த யுக்திகளை தொடர்ந்து இப்பகுதியில் வாசிப்போம்.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானானுக்குள் நுழைய ஒரு சில அடிகளே இருந்த போது, இஸ்ரவேல் ஜனங்களை வழி மறித்தது வெள்ளம் கரைப்புரண்டு ஓடும் யோர்தான் நதி. அதை அற்புதமாய் கடந்து வந்தவுடனே அவர்களுக்கு காத்திருந்தது எரிகோவின் அடைக்கப்பட்ட மதில். இதுபோன்று அடுத்தடுத்து போராட்டங்களும், அடைக்கப்பட்ட வாசல்களும் உங்கள் வாழ்வில் காணப்படுகிறது என்றால், தடைகளை முறிக்கிறவர் உங்களுக்கு முன்பாக கடந்து போகிறார் என்று விசுவாசியுங்கள் !

எரிகோ மதிலானது கி.மு. 8000 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது. இது யோர்தான் பள்ளத்தாக்கில் உள்ள ஓர் பட்டணம். மழை வெள்ளத்தில் ஜனங்கள் பாதுகாக்கப்பட அமைக்கப்பட்டதே இம்மதில் சுவர். இப்பேற்பட்ட மதிலை கடக்க கர்த்தர் கையாண்ட யுக்தி என்னவென்று உங்களுக்கு தெரியுமா? மதிலைச் சுற்றி வருவது மாத்திரமே !

“பட்டணத்தைச் சுற்றி நடந்துபோங்கள்; யுத்தசன்னத்தரானவர்கள் கர்த்தரின் பெட்டிக்குமுன் நடக்கக்கடவர்கள்” என்று கர்த்தரின் கட்டளைப்படி யோசுவா ஜனங்களை ஆயத்தப்படுத்தி தொடர்ந்து 7 நாட்கள் மதிலை சுற்றினர். தாக்குதல் ஏதும் நடத்தாமல், கோட்டையை சுற்றி சுற்றி வந்ததைக் கண்டு எரிகோ பட்டணத்தார் குழம்பினார்கள். கர்த்தர் உரைத்தப்படி ஏழாம் நாள்; ஏழு முறை சுற்றிய பிறகு எக்காளத்தை ஊதி ஆர்ப்பரித்ததும் எரிகோ மதில் தரைமட்டம் ஆனது.

### இப்படிப்பட்ட அசாதாரணமான காரியங்கள் நம் வாழ்விலும் நடைபெற நாம் இச்சம்பவத்தில் கவனிக்க வேண்டியவை:

- “எரிகோ இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அடைக்கப்பட்டிருந்தது; ஒருவரும் வெளியே போகவுமில்லை, ஒருவரும் உள்ளே வரவுமில்லை.” இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஜனங்களை நடத்தி வந்த யோசுவா கர்த்தரை நோக்கிப் பார்க்கிறார். ஆகவே, நாமும் எந்த சூழ்நிலையிலும் முதலில் கர்த்தருடைய சமூகத்திற்கு ஓடுவதில் கவனமாய் இருக்க வேண்டும்.

- யோசுவா கர்த்தருடைய திட்டத்தை சொல்லும்போது ஜனங்கள் முறுமுறுக்காமல், இது எப்படி சாத்தியமாகும் என்று கேள்வி கேட்காமல், தாமதம் செய்யாமல் உடனே கர்த்தர் தங்களுக்கு உரைத்தபடி செயல்படுகின்றனர். எனவே, இதுபோன்ற சூழ்நிலைகளில் நாமும் கர்த்தர் நம்மிடம் செய்ய சொல்லும் காரியங்களைக் கவனித்து அதை தாமதிக்காமல் உடனே செய்ய வேண்டும்.

- எரிகோ பட்டணத்தாரின் அடையாளமும், கம்பீரமும், பெருமையுமாய் காணப்பட்ட அவ்வளவு பெரிய மதில் சுவர் இடிந்து விழுந்த இரகசியம் உங்களுக்கு என்னவென்று தெரியுமா? கீழ்ப்படிதல் (யோசுவா 1:1-16). கர்த்தரின் வார்த்தைக்கு யோசுவாவும், அவன் ஜனங்களும் கீழ்ப்படிய ஆயத்தமாயிருந்ததினால் கர்த்தர் அவர்களுக்கு எதிராக இருந்த எல்லா தடைகளையும் தகர்த்துப் போட்டார்.

அன்பு வாலிபர்களே ! நம் தேவன் அடைக்கப்பட்ட வாசலை திறப்பவர் மட்டுமே அல்ல ! அடைக்கப்பட்ட வாசலை தகர்த்துப் போடுகிறவர் ! ஏனென்றால் அவர் இரும்பு தாழ்பாள்களை உடைத்துப்போடுகிறவர். இப்படிப்பட்ட அசாதாரணமான அற்புதங்கள் உன் வாழ்விலும் நடக்க அவர் சொல்லும் வழிமுறைகள் என்னவென்று சற்று நிதானித்து அதை புரிந்துக் கொண்டு அதற்கு கீழ்ப்படிந்துப் பாருங்கள், யுத்தம் கர்த்தருடையதாய் மாறும். ஏனென்றால், அவர் யோசனையில் பெரியவர் !

ஜெபம்: பெனிட்டா

# ஏப்ரல்- 2023 ஜெபக்கையேடு

## தேர்தல்

1. 2024ம் ஆண்டு நடைபெறவிருக்கிற பாராளுமன்ற தேர்தலில் தேவ ஆளுகை உண்டாகவும், கர்த்தருக்கு சித்தமானவர்கள் தேர்ந்தெடுக்கப்படவும் ஜெபிப்போம்.

2. வாக்களிக்கவிருக்கும் 91 கோடி வாக்காளர்களும் கடமையுணர்வோடு வாக்களிக்கவும், கள்ள ஓட்டுகள் போட முயற்சிக்கும் காரியங்கள் முற்றிலும் தடுக்கப்படவும் ஜெபிப்போம்.

3. மந்திரம், பில்லிசூனியம் செய்து தேர்தலில் வெற்றி பெறுவதற்காக திட்டங்களைத் தீட்டி செயல்படுகிறவர்களின் திட்டங்கள் அபத்தமாகிப்போக ஜெபிப்போம்.

4. தேர்தலுக்காக உயிர்களைக் கொடுத்து இரத்தம் சிந்தி செய்யப்படும் மந்திரங்களின் வல்லமைகள் அழிக்கப்பட ஜெபிப்போம்.

5. தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் அவரது குழுவினரும் பாரபட்சமற்ற முறையில் விதிகளை நடைமுறைபடுத்துவதில் கண்டிப்புடன் செயல்பட ஜெபிப்போம்.

6. தேர்தலில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் அந்தந்த மாநில காவல்துறையினர் பாரபட்சமின்றி செயல்பட ஜெபிப்போம்.

7. தேர்தலுக்கு ஆயத்தபடும் கட்சிகள் எந்தவிதமான சட்டவிரோத செயல்களிலும் ஈடுபடாதபடிக்கு ஜெபிப்போம்.








## எழுப்புதல்

8. உலகம் முழுவதும் இருக்கும் 800 கோடி மக்கள் சத்தியத்தை அறியவும், இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

9. உலகம் முழுவதும் இருக்கும் அனைத்து திருச்சபைகளிலும் எழுப்புதல் உண்டாக ஜெபிப்போம்.

10. கள்ள உபதேசங்கள் மடங்கடிக்கப்படவும், பொய்யான எழுப்புதலைக் கொண்டு வந்து ஏமாற்றுகிற காரியங்கள் சபைகளிலிருந்து அப்புறப்படுத்தப்படவும் ஜெபிப்போம்.

11. எழுப்புதலுக்கு விரோதமாக எழும்புகிற சாத்தானின் கிரியைகள் முறியடிக்கப்படவும், அவைகள் கட்டப்படவும் ஜெபிப்போம்.

12. பொய்யான எழுப்புதலைக் கொண்டு வரவும், ஏமாற்றுகிற ஊழியங்களை எழுப்பவும், பொய்யான ஊழியர்கள் எழும்பி மக்களை வஞ்சிக்கவும், கிரியை செய்கிற ஆவிகள் கட்டப்பட ஜெபிப்போம்.

13. எழுப்புதலின் அக்கினி வாலிபர்கள் மற்றும் சிறுபிள்ளைகள் மீது ஊற்றப்படவும், வாலிபர்களும், சிறுபிள்ளைகளும் எழுப்புதலின் அக்கினியை பரவச் செய்கிறவர்களாக மாறவும் ஜெபிப்போம்.

14. ஆதி அப்போஸ்தலர்கள் காலத்தில் நடைபெற்ற அற்புத அடையாளங்கள், வாலிபர்கள் மற்றும் சிறுபிள்ளைகளைக் கொண்டு நடைபெற போராடி ஜெபிப்போம்.



## மருத்துவத் துறை

15. தேசத்தில் செயல்பட்டு வரும் 70,000 மருத்துவமனைகளும் சிறந்த முறையில் செயல்பட ஜெபிப்போம்.

16. நம் தேசத்தில் செயல்பட்டு வரும் 37,725 அரசு மருத்துவமனைகளிலும் சரியான சிகிச்சைகள் அளிக்கப்படவும், போதிய மருத்துவர்கள் நியமிக்கப்படவும் ஜெபிப்போம்.

17. மருந்து தயாரிக்கும் 3000 நிறுவனங்களும் தரமான மருந்துகளைத் தயாரித்து விநியோகிக்க ஜெபிப்போம்.

18. இந்தியாவில் 3-ல் 2 டாக்டர்கள் முறையான மருத்துவ பட்டம் இல்லாமல் செயல்படுவது தடுக்கப்பட ஜெபிப்போம்.

19. இந்தியாவிலுள்ள அனைத்து கிராமங்களுக்கும் மருத்துவ வசதி சென்றடையவும், முறையான மருத்துவர்கள் நியமிக்கப்படவும் ஜெபிப்போம்.

20. தவறான சிகிச்சை மற்றும் கவனக் குறைவால் ஏற்படும் உயிரிழப்புகள் தடுக்கப்படவும், சரியான நேரத்தில் சரியான சிகிச்சை கொடுக்கப்படவும் ஜெபிப்போம்.

21. மருத்துவத் துறையில் பணிசெய்யும் ஒவ்வொரு டாக்டர்கள் மற்றும் செவிலியர்களுக்கும் நல்ல ஞானம், கிருபை உண்டாக ஜெபிப்போம்.







## மாணவர்களின் பாதுகாப்பு

22. நம் தேசத்தில் உள்ள 14 லட்சம் பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்களின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.

23. பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் சுமார் 32 கோடி மாணவ, மாணவியர்களுக்கு எதிராக நடைபெறும் பாலியல் வன்கொடுமைகள் தடுத்து நிறுத்தப்பட ஜெபிப்போம்.

24. மாணவிகளுக்கு நடைபெறும் பாலியல் துன்புறுத்தலுக்கு காரணமாகவும், உடந்தையாகவும் செயல்படும் ஆசிரியர்களை, கல்வி நிறுவனங்களை கண்டுபிடித்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட ஜெபிப்போம்.

25. பள்ளிக் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு விரோதமாக எழும்பி கிரியை செய்யும் தற்கொலையின் ஆவிகள் கட்டப்பட ஜெபிப்போம்.

26. பாலியல் வன்கொடுமைகளிலிருந்து பெண் குழந்தைகள் பாதுகாக்கப்படவும், இச்சையின் ஆவிகள் கட்டப்படவும் ஜெபிப்போம்.

27. பள்ளிக் கல்லூரியில் படிக்கும் மாணவ மாணவியர்களிடம் ஆசை வார்த்தைகளைக் கூறி தவறான உறவுகளில் சிக்க வைக்கும் ஆவிகள் கட்டப்பட ஜெபிப்போம்.

28. மாணவ, மாணவியர்களுக்கு விரோதமாக கிரியை செய்யும் சாத்தானின் திட்டங்கள் முற்றிலும் அழிக்கப்பட ஜெபிப்போம்.

## மதுபானக்கடைகள்




29. தமிழ்நாட்டில் இயங்கி வரும் 5300 மதுபானக்கடைகள் மூடப்படவும், மதுபானத்தினால் ஏற்படும் மரணங்கள் தடுக்கப்படவும் ஜெபிப்போம்.

30. மதுபானத்திற்கு அடிமைப்பட்டவர்கள் அந்த அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படவும், இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளவும் ஜெபிப்போம்.

*தினமும் ஒரு நிமிடம் எடுத்து அன்றைய தேதியில் கொடுக்கப்பட்டுள்ள ஜெபக்குறிப்புக்காக முழுமனதோடு கருத்தாய் ஜெபியுங்கள்!*



# ACHIEVERS 2023

## தேர்வு எழுதும் மாணவர்களுக்கான கூடுகை!

கர்த்தருடைய பெரிதான கிருபையால் ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் தேர்வு எழுதும் மாணவர்களுக்கான (Achievers) கூடுகை சித்தூர், ஜெபமலை, கோவில்பட்டி, பெரம்பலூர், தேனி, திருச்சி, வால்பாறை, காஞ்சிபுரம் மற்றும் வேலூரில் நடத்த தேவன் கிருபை செய்தார். இக்கூடுகையில் சுமார் 3000க்கும் அதிகமான மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டார்கள். தேர்வைக் குறித்த பயம், நம்பிக்கையற்ற நிலைமை மற்றும் தற்கொலை எண்ணத்தோடு வந்த ஒவ்வொருவரையும் தேவன் சந்தித்து, பயங்கள் நீங்கி, தவறான எண்ணங்களிலிருந்து விடுதலைப் பெற்று தேர்வில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையுடன் கடந்து சென்றனர். தேவ ஊழியர்கள் ஒவ்வொருவரையும் கர்த்தர் வல்மையாக பயன்படுத்தினார். தேவனுக்கே மகிமை!



















# செப்பனியா

அன்பான இளம் நெஞ்சங்களே! ஒவ்வொரு மாதமும் வேதாகமத்தில் உள்ள ஒவ்வொரு புத்தகமாகப் பார்த்து வருகிறோம். இந்த மாதம் சிறிய தீர்க்கதரிசன நூல்களில் ஒன்பதாவது புத்தகமான "செப்பனியா" புத்தகத்தின் தகவல்களைச் சுருக்கமாக பார்க்கலாம்.

## முன்னுரை

சிறையிருப்புக்கு முன்பு தீர்க்கதரிசனம் சொன்ன சிறிய தீர்க்கதரிசிகளில், செப்பனியாவின் புஸ்தகம் கடைசியாகக் இணைக்கப்பட்டுள்ளது. இவர் எரேமியாவின் காலத்திற்கு சற்று முந்திய காலத்தில் ஊழியம் செய்தவர். யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போன காலத்தில், எரேமியா கர்த்தருடைய வார்த்தையை தீர்க்கதரிசனமாகச் சொன்னார்.

கல்தேயர் மூலமாய் யூதாவுக்கும் எருசலேமுக்கும் பொதுவான அழிவு வரும் என்று செப்பனியா தீர்க்கதரிசனம் உரைத்தார். யூதர்களுடைய பாவங்களை அவர்களுக்கு விளக்கிக் காண்பித்தார். யூதர்கள் தங்கள் பாவங்களை விட்டு மனந்திரும்ப வேண்டுமென்று எச்சரித்தார்.

யூதா தேசத்தைப்போலவே, மற்ற தேசங்களும் பாவம் செய்தால், அவர்களுக்கும் அழிவு வரும் என்று, செப்பனியா அண்டை தேசத்தாரையும் எச்சரித்தார். யூதர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப் போனாலும், ஏற்ற காலத்திலே அவர்கள் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, தங்கள் சொந்த தேசத்திற்கு சந்தோஷமாகத் திரும்பி வருவார்கள் என்னும் ஆறுதலான வாக்குத்தத்தங்களையும் செப்பனியா அவர்களுக்கு சொன்னார்.

கி.மு. 640-612ஆம் வருஷங்களில் செப்பனியாவின் புஸ்தகம் பாலஸ்தீன தேசத்தில் எழுதப்பட்டது. இந்தப் புஸ்தகத்தின் ஆசிரியர் செப்பனியா தீர்க்கதரிசி ஆவார் (செப். 1:1).


**ஆசிரியர்:** செப்பனியா

**காலம்:** கி.மு 640-612

**அதிகாரங்கள்:** 3

**வசனங்கள்:** 56

**வார்த்தைகள்:** 1,476



## சிறப்பம்சங்கள்

- கர்த்தருடைய நாள் தோன்றும் என்பதை குறித்ததான விரிவான விளக்கம் பழைய ஏற்பாட்டு புத்தகங்களிலேயே இந்த புத்தகத்தில் தான் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது.
- தேவ மக்கள் தேவனின் எச்சரிப்புகளை சந்திக்க வேண்டியதாகவும் அவரது வாக்குத்தத்தங்களினால் ஆறுதல் அடைய வேண்டியதாகவும் இருக்கின்றது என்பதை செயல்முறைப்படுத்தி காட்டுகின்றது
- துன்மார்க்கருக்கு எதிராக வரும் தேவ கோபாக்கினையால், தேவ மக்களுக்கு வரும் இரட்சிப்பின் நாளைக் குறித்த செப்பனியாவின் வெளிப்பாடுகள் புதிய ஏற்பாட்டின் கடைசி கால வெளிப்பாடுகளுக்கு முன்னோட்டமாக இருக்கிறது.

## புதிய ஏற்பாட்டில் நிறைவேறுதல்

தம்முடைய இரண்டாம் வருகையை குறித்து பேசுகையில் (செப். 1:2,15; மத். 13:40-42; 24:29) இயேசு இரண்டு முறை செப்பனியாவின் புத்தகத்திலிருந்து எடுத்துக்காட்டுகிறார். கர்த்தருடைய நாள் என்று செப்பனியா குறிப்பிடுவது மகா உபத்திரவத்தின் காலத்தில் நடக்கும் சம்பவங்களிலிருந்து ஜீவனோடு இருப்பவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்க இயேசு மீண்டும் வரும் வரை நடப்பவற்றை வர்ணிப்பதாக புதிய ஏற்பாட்டில் எழுத்தாளர்கள் நம்புகின்றனர். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும், நியாயத்தீர்ப்பின் நாளையும் "அந்த நாள்" என்று புதிய ஏற்பாடு பலமுறை குறிப்பிடுகின்றது.

# Revival IGNITERS

## Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த

**ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!**

## EVERY 1st SUNDAY (2nd April)

**MUMBAI – DHARAVI (5PM – 8PM)**
Gethsemane Prayer Centre
2nd Floor, Above Balakrishna Farsan Mart,
Opp. Apna Restaurant,
Near Kamarajar School,
90 Feet Road,
9004882470

**VELLORE (3PM)**
Gethsamane Prayer Center,
Ajantha Mahal,
# 3, 6th West Cross Road,
Gandhi Nagar
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM – 6:30PM)**
Gethsamane Prayer Center,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442082200

**TUTICORIN (3PM – 5:30PM)**
Gethsamane Prayer Center,
Jehovah Jireh
Towers, 51/8D/3, 1st Floor
Tiruchendur Road,
Muniasamypuram Land mark :
South Police Station to Kamaraj
College Rd. 9442885315

**TIRUPATI (3PM)**
Old Community Hall, West Church
9985033401 | 9442885315

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
Gethsamane Prayer Center,
Sekihnah Mahal,
Mullai Nagar.
9750955548 | 8344949555

## EVERY 2nd SATURDAY (8th April)

**BANGALORE (3PM-5PM)**
Telugu Church, #21, Nethaji Road,
Railway Line
Pulikeshi Nagar, Frazer Town.
Opp: BWSSB Office.
9962085523 | 9591077110

**MADURAI (3PM -5:30PM)**
American College Higher
Secondary School,
AC School
Backside to Arumugam Hotel,
Tallakulam Bus Stop.
9750955548 | 9344759316

## EVERY 2nd SUNDAY (9th April)

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

**MUMBAI - THANE (4PM – 6:30PM)**
9004882470

**POLLACHI (3PM TO 6PM)**
GPC, Grace Auto 1st floor,
163 , raja mill road pollachi,
9486037586 | 9487856205

**THANJAVUR (3PM)**
Gethsamane Prayer Center,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9444381971 | 9488475315

**KOVILPATTI (3PM -5:30PM)**
St. Paul's Matriculation School
9677859766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
P.M.V. Packiyavathy Building,
R.A. Nursing Institute,
SCV Computers (top Floor)
Main Road,
Near Union Office Opposite
9965377427 | 9750955548

**THENI (2:30PM – 5PM)**
Gethsamane Prayer Center,
#203, Madurai Road,
Opp. Anantham Silk
Dr. Kamaraj Hospital,
1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:30PM)**
Jawarhalal Middle School
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
Gethsamane Prayer Center,
9677858766 | 9442906567

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary School Mela Sathankulam.
9442885315

**CHENGALPET (3PM – 5:30PM)**
Blessing School,
Tirukazhukundram Road
9488475315

**VILLUPURAM (3PM – 5:30PM)**
Gethsamane Prayer Center,
HH Complex, Namnadu Textiles Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

## EVERY 3rd SUNDAY (16th April)

**TIRUNELVELI (2:30 PM)**
Gethsamane Prayer Center,
Shah Complex, #43/R4, Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9488212915

**COIMBATORE (4 PM)**
Gethsamane Prayer Center,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
0422 – 2309040 | 8903405315

**TRICHY (3 PM)**
Gethsamane Prayer Center,
22A, 1st Floor Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur.
9488475315

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram,
Kadaiyam (via)
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3 PM)**
VGP Victory House, Mount Road
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**TIRUVARUR (3:30PM)**
Gethsamane Prayer Center,
1A/25B, Bypass Road
(opp Arasu Autos)
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
Gethsamane Prayer Center,
MBT Road,
Navalpur.
9500283179 | 9442885315

**ERODE (4PM – 6:30PM)**
Gethsamane Prayer Center,
#216, 1st Floor, Near Fire Service,
Gandhiji Road
9750722000

**NAGERCOIL (3PM TO 6PM)**
GPC, NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagerkoil PH:
7598155503 | 9442885315

**PONDICHERRY (3PM TO 6PM)**
St. Peter School,
Govt Dental Hospital Back side
8344433800 | 9787339422

**DINDUGAL (3PM TO 6PM)**
Sophia School, Govt Hospital Emergency Block opp
9043422612 | 9715495621

**CHITTOOR (3PM TO 6PM)**
St. Lukes Telugu Church
PH: 9487734603

## EVERY 4th SATURDAY (22nd April)

**PERAMBALUR (5PM -8PM)**
Gethsamane Prayer Center,
M K Complex, 71,
Venkatesapuram, Near Bank of Baroda, Trichy Main Road.
9788788512

## EVERY 4TH SUNDAY (23rd April)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
Gethsamane Prayer Center,
H S R Tower, 2nd Floor,
Near CSI Gowdi Church
9488475315

**KRISHNAGIRI (3 PM – 5PM)**
Gethsamane Prayer Center,
Near Arun Hospital
Royakottai Road.
9962085523 | 9524999711

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,Jawahar Bazzar, Bunglaw Street, Karur.
9489775075

இயேசு விடுவிக்கிறார்

வாலிபர் உலகம்

தொலைக்காட்சி நிகழ்ச்சி

சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி

காலை 7 மணிக்கு
YouTube மற்றும் Comforter TVயிலும்
பார்க்கலாம்.

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!
9750955547




ON SUNDAY 30TH APRIL
TIME: 3:00 PM - 5:00 PM

IGNITERS, MONTHLY YOUTH FELLOWSHIP IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON LAST SUNDAY OF EVERY MONTH

# நிபந்தனைகளும் வாக்குத்தத்தங்களும்

# யோசேப்பு







சிறப்பு கட்டுரை: ஜெயசீலன்

ஹலோ.....தம்பி, தங்கச்சி எல்லாரும் சுகமாக இருங்கீங்களா?
'நிபந்தனைகளும் – வாக்குத்தத்தங்களும்' இந்த வரிசையில் இம்மாதம் யோசேப்பு என்ற வாலிபரின் அனுபவங்களைக் காண்போம். நம் முற்பிதாக்களில் அநேகருக்கு வாக்குத்தத்தங்கள் தந்து ஆசீர்வதித்த தேவன், வாலிபன் யோசேப்புக்கோ சொப்பனங்கள் மூலம் அவரது எதிர்காலத்தைக் குறித்த திட்டங்களைத் தந்தார். என்ன சொப்பனம் அது!
நாம் வயலில் அறுத்த அரிகளைக் கட்டிக்கொண்டிருந்தோம்; அப்பொழுது என்னுடைய அரிக்கட்டு நிமிர்ந்திருந்தது; உங்கள் அரிக்கட்டுகள் என் அரிக்கட்டைச் சுற்றி வணங்கி நின்றது என்றான் (ஆதி. 37:7). தன் சகோதரரை நோக்கி: நான் இன்னும் ஒரு சொப்பனத்தைக் கண்டேன்; சூரியனும் சந்திரனும் பதினோரு நட்சத்திரங்களும் என்னை வணங்கியது என்றான் (ஆதி.37:9). இந்த இரண்டாம் சொப்பனத்தின் நிமித்தம், நானும் உன் தாயாரும் உன் சகோதரரும் தரைமட்டும் குனிந்து உன்னை வணங்க வருவோமா? என தகப்பனே யோசேப்பைக் கடிந்து (ஆதி.37:10) கொண்டார் என்பதாக வேதம் கூறுகிறது. இந்த சொப்பனங்கள், யோசேப்பு அடிமையாகக் கொண்டுபோகப்பட்ட (ஆதி.37:36) எகிப்து தேசத்தில் நிறைவேறியது.

## PET CHILD (செல்லப்பிள்ளை)

யோசேப்பு என்பதற்கு பெருக்கம் (Increase) அல்லது பெருகச் செய்கிறவர் (Increaser) என்று பொருள். யோசேப்பு தன் சிறு வயதிலிருந்தே கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், நல்ல குணநலன்களோடும் வளர்ந்தார். சிறு வயதிலேயே சொப்பனங்களைக் காணும் கிருபையை தேவாதி தேவன் ஈவாய்த் தந்திருந்தார். இஸ்ரவேலின் முதிர்வயதில் பிறந்த (11வது) பிள்ளை என்பதால், மற்ற பிள்ளைகளை விட யோசேப்பை அதிகமாய் நேசித்தார். யோசேப்புக்கு அழகிய உடைகளை செய்வித்து மகிழ்ந்தார். யோசேப்பின் மீது தன் அன்பு முழுவதையும் காட்டினார். யோசேப்பு தன் தகப்பனாகிய இஸ்ரவேலுக்குச் செல்லப் பிள்ளையாயிருந்தார்.

## PET INTO PIT (குழிக்குள் செல்லப்பிள்ளை)

தங்களையெல்லாம் விட யோசேப்பை தங்கள் தகப்பன் அதிகமாய் நேசித்ததால், அவருடைய சகோதரர் எல்லாரும் தங்கள் தம்பியாகிய யோசேப்பைப் பகைத்தார்கள். நீ எங்களை ஆளப்போகிறாயோ? என்று சொல்லி, யோசேப்பின் சொப்பனங்களின் நிமித்தம் அதிகமாய்ப் பகைத்தார்கள். சொப்பனக்காரன் என்று, தங்களை வனாந்திரத்திற்குத் தேடி நலம் விசாரிக்க வந்த, தங்கள் சகோதரனாகிய யோசேப்பைக் கொலை செய்ய சதியோசனை பண்ணி தகப்பனின் செல்லப்பிள்ளையாயிருந்த யோசேப்பை குழிக்குள் தூக்கிப்போட்டார்கள் (ஆதி.37: 5, 8, 18, 24).

## PIT TO PRISON (குழியிலிருந்து சிறைக்கு)

குழியிலிருந்த யோசேப்பைத் தூக்கியெடுத்து, கீலேயாத் நாட்டிலிருந்து, எகிப்து தேசத்திற்குச் சென்ற வியாபாரிகளிடம் 20 வெள்ளிக்காசுக்கு அடிமையாக விற்று விட்டார்கள்.

அந்த வியாபாரிகள் யோசேப்பை, போத்திபார் என்பவரிடம் விற்று விட, அவர் வீட்டில் வேலைக்காரரானார் யோசேப்பு. இப்படியெல்லாம் நடக்குமென்று கனவில் கூட நான் நினைத்ததில்லையே. கர்த்தர் என்னோடு தான் இருக்கிறாரா? இதுவா கர்த்தரின் வழி?'' என வாலிபனாகிய யோசேப்பு

கலங்கியிருப்பார். நாட்கள் நகர்ந்தது. தன் எஜமானின் நம்பிக்கைக்குரியவராய் இருந்த தருணம் எஜமானின் மனைவியின் மூலம் அடுத்த சோதனை வந்தது.

பாவம் செய்ய, தன் வாலிபத்தின் இச்சையை நிறைவேற்றிக்கொள்ள தனக்கு ஒரு வாய்ப்பு வந்த போதும், 'இத்தனை பெரிய பொல்லாப்பை, என் தேவாதி தேவனுக்கு விரோதமாய்ச் செய்வதெப்படி' என்று சொல்லி, தன் உடைகளை இழந்து, ஓடினார்; யோசேப்பு, அவர் செய்யாத தவறுக்காக, பொய்யாய்க் குற்றம் சாட்டப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

## PRISON TO PALACE
## (சிறையிலிருந்து அரண்மனைக்கு)

யோசேப்பின் வாழ்வு சிறையிலேயே முடிந்து விடவில்லை. நாள் ஒன்று வந்தது. மன்னன் பார்வோன் ஒரு சொப்பனத்தைக் கண்டார், அவர் கண்ட சொப்பனத்தின் அர்த்தத்தைச் சொல்ல, எகிப்தின் மந்திரவாதிகளால் முடியாமல் போனது. எனவே சிறைச்சாலையிலிருந்த யோசேப்பு, தீவிரமாய் அரண்மனைக்கு அழைத்து வரப்பட்டு, எகிப்தின் மன்னன் பார்வோன் முன் நிறுத்தப்பட்டார் (ஆதி.41:14).

பார்வோனின் சொப்பனத்திற்கு பதில் கிடைக்க, எகிப்து தேசத்திற்கு வரவிருக்கும் மிகப்பெரிய பஞ்சத்திலிருந்து, தேசத்துக் குடிகளைப் பாதுகாக்கும் பொறுப்பையும், தனக்கு அடுத்த ஸ்தானத்தையும் எகிப்தின் மன்னன் பார்வோன், யோசேப்புக்குத் தந்தார்.

## PALACE TO PRESIDENT
## (அரண்மனையிலிருந்து அதிபதி)

மன்னன் பார்வோன், தன் கையில் போட்டிருந்த தன் முத்திரை மோதிரத்தைக் கழற்றி, அதை யோசேப்பின் கையிலே போட்டு, தன்னுடைய இரண்டாம் இரதத்தின் மேல் யோசேப்பை ஏற்றி, தெண்டனிட்டுப் பணியும்படி கூறி, மாபெரும் அதிகாரம் வழங்கி, தேசத்தின் அதிபதியாய் யோசேப்பை உயர்த்தினார். முழு எகிப்து தேசமும் யோசேப்பின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது (ஆதி.41:41 - 44) - அதோடு மட்டுமல்ல, யோசேப்பு கண்ட சொப்பனத்தின்படியே, எந்த சகோதரர்களால் யோசேப்பு வெறுத்து, வியாரிகளிடம் விற்கப்பட்டாரோ, அதே சகோதரர்கள் யோசேப்பின் கால்களில் விழும்படி தேவன் செய்தார் (ஆதி.42:6, 43:26.28). தான் இனி பார்ப்பேனோ! என்று நினைத்த தன் தகப்பனையும் கண்டு மகிழ்ந்தார் (ஆதி.46:29).

என் அன்பு மகனே, மகளே! 17-வயதில் எகிப்துக்கு அடிமையாய் சென்றவர், தனது 30-ம் வயதில் எகிப்தின் அதிபதியானார். மிக சுலபமாக அல்லது கண்மூடிக் கண் திறப்பதற்குள் இது நடந்துவிடவில்லை. சுமார் 13 வருடங்கள் அவர் பட்டப்பாடுகள் கொஞ்சமல்ல. கர்த்தர் நடத்தி வந்த வழிகள் மிகக் கடினமாக இருந்தாலும், 'கர்த்தர் யோசேப்போடே இருந்தார்' என்று சொல்லும் அளவிற்கு, கர்த்தருக்கு முன்பாகவும் தன் எஜமானுக்கு முன்பாகவும் தன்னை உண்மையுள்ளனாகவும், உத்தமனாகவும் காத்துக்கொண்டார்.

பிரியமான பிள்ளைகளே! என் வாழ்க்கையில், ஏன் இந்தக் கண்ணீர்? ஏன் தொடர் தோல்விகள்? ஏன் இவ்வளவு கஷ்டம்? ஏன் இந்தத் தனிமை? ஏன் இந்த சிறையிருப்பு? கர்த்தர் என்னோடு இல்லையா? என்று கண்ணீர் வடிக்கின்றீர்களோ?பயங்கரமான குழிக்குள் தூக்கி வீசப்பட்டது போலுள்ளதா? செய்யாத தவறுக்காக தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கின்றீர்களோ? இது தான் கர்த்தரின் வழியா? எனத் தடுமாறுகின்றீர்களோ? கலங்காதிருங்கள். உன்னைத் தூக்கி எடுத்து (சங்.40:2), தன் சொந்தப் பிள்ளை என்கிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைத் தந்து (ரோமர்.8:15), உன் சிறையிருப்பைத் திருப்பி (உபா.30:3) உனக்கு இரங்கும் ஒரு இரட்சகர் இருக்கிறார். கவலைப் படாதிருங்கள். உங்களை நிந்தித்தவர்களையும், மனமடிவாக்கினவர்களையும் உங்கள் கால்களில் வந்து விழும்படி தேவன் செய்வார்.

சிரச்சேதம் செய்தாலும் சரி! சிறைத் தண்டனை தந்தாலும் சரி! என்று பாவத்திற்கு விலகி ஓடிய வாலிபனாகிய யோசேப்பைப் போல் பாவத்திற்கு விலகி பரிசுத்தத்தைக் காத்துகொள்ளுங்கள். உங்களுக்கும் ஒரு ராஜ மேன்மை காத்திருக்கிறது ■





# ஓடுகளம்

## எழுப்புதல் ஓட்டம்

நிகழ்வு: காலேப்

**ஓடுகளம் என்கிற தொடர் மூலம் ஒவ்வொரு மாதமும் தேவனுக்காக ஓடியவர்களைக் குறித்தும், மாரத்தான் ஓட்டப்பந்தய வீரர்களைக் குறித்தும் பார்த்து வருகிறோம். தேவ மனிதர்களின் தீவிரமான ஓட்டம் தேவ ஜனங்களுக்கு விடுதலையையும், ஆசீர்வாதத்தையும் கொடுக்கும். இந்த கடைசிக்கால எழுப்புதலுக்காக தெரிந்துகொள்ளப்பட்ட நம் மூலம் அநேகர் விடுவிக்கப்படவும், ஆசீர்வதிக்கப்படவும் வேண்டுமென்றால் நாம் தீவிரமாக ஓட வேண்டும், தீவிரமாக செயல்பட வேண்டும். ஆனால் சில வேளைகளில் பிரச்சனைகள், போராட்டங்கள் மற்றும் பின்மாற்றங்கள் நம் ஓட்டத்தைத் தடை செய்கிறது. அதுமட்டுமல்லாமல் தவறான திசையில் ஓடவும் வைக்கிறது. இந்த தடைகளை மேற்கொண்டு தேவனுக்காக எழுப்புதலில் எப்படி ஓடுவது என்பதைப் பார்க்கலாம்.**

*Felix Kirwa*



2022ம் ஆண்டு ஜுன் மாதம் ஸ்வீடன் நாட்டின் தலைநகரான ஸ்டாக்ஹோம் பட்டணத்தில் சர்வதேச மாரத்தான் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந்த போட்டியில் கென்யா நாட்டை சேர்ந்த Felix Kirwa என்கிற மாரத்தான் வீரர் பங்கு பெற்றார். அவர் தான் வெற்றி பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஓட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில், **Felix Kirwa** அனைவரையும் முந்தி முதலிடத்தில் ஓட ஆரம்பித்தார். மாரத்தான் ஓட்டம் நடைபெறும் பாதையில் ஓட்டப்பந்தய வீரர்களை வழிநடத்த நியமிக்கப்பட்ட தன்னார்வ ஊழியர்கள், **Felix Kirwa**வை தவறான பாதையில் திசைத்திருப்பி விட்டனர். இதனால் **Felix Kirwa** 1.1 கி.மீ தூரம் தவறான பாதையில் ஓடி விட்டார். தவறை உணர்ந்த போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் மீண்டும் சரியான பாதையில் ஓட வைத்தனர். இது அவருடைய வெற்றியை பாதிக்கும் என்று நினைத்தார்கள். ஆனால் இந்த தவறு தன் வெற்றியை தடுத்து விட கூடாது என்று கடினமாக ஓடி, போட்டியில் முதலிடம் பிடித்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். ஒருவேளை நாம் தவறாக ஓடி விட்டோம்; இனி நம்மால் வெற்றி பெற முடியாது என்று நினைத்திருந்தால் அவர் அந்த வெற்றியைப் பெற்றிருக்க முடியாது.

**Felix Kirwa**வை குறித்து படிக்கும் போது, ஒரு மனிதன் நமக்கு வழிகாட்டினால் அது தவறாக போக அதிக வாய்ப்பு இருக்கிறது என்பதை உணர முடிகிறது. அதினால் இழப்புகள் கூட ஏற்படும். ஆனால் நாம் இயேசுவை சார்ந்திருக்கும் போது, அவர் நமக்கு வழிகாட்டும் போது அது தவறாகவும் இருக்காது, அந்த ஓட்டமும் தடைபடாது. அதற்கு சிறந்த உதாரணம் பிலிப்பு என்கிற சுவிசேஷகன். அவர் ஓட்டம் ஜெயமாக இருக்க காரணம் என்ன?

## துணிந்து செயல்பட்டார்

பிலிப்பு ஊழியம் செய்த நாட்களில் உபத்திரவமும், நெருக்கமும் அதிகமாக இருந்தது. அப்பொழுது தான் ஸ்தேவான் இரத்த சாட்சியாக மரித்திருந்தார். எழுப்புதல் பரவ கூடாதபடி தடைகள், பிரச்சனைகள், துன்புறுத்தல்கள் மற்றும் சிறையிருப்புகள் அதிகமாக காணப்பட்டன. அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் பிலிப்பின் ஓட்டம் தடைபடவில்லை (அப் 8:6). அவர் தீவிரமாக சுவிசேஷத்தை அறிவித்து வந்தார். அதற்கு காரணம், பிலிப்பு பரிசுத்த ஆவியினாலும், ஞானத்தினாலும் நிறைந்திருந்தார் (அப் 6:3) என்று வேதத்தில் வாசிக்கிறோம். பரிசுத்த ஆவியின் நிறைவு இருக்கும் போதுதான், தேவனுக்காக துணிந்து செயல்பட தேவையான தைரியமும், விசுவாசமும் உண்டாகும். பிலிப்பு

சுவிசேஷம் அறிவிக்காமலிருக்க பல காரணங்களும், தடைகளும் இருந்தது. ஆனால் அத்தனையும் பரிசுத்த ஆவியின் வல்லமைக்கு முன்பாக தகர்ந்து போனது. ஆங்கிலத்தில் **Fortune favors the brave** என்று பிரபலமான பழமொழி இருக்கிறது. ''துணிந்து செயல்படுபவனுக்கு தான் அதிஷ்டம் கைகொடுக்கும்'' என்று சொல்வார்கள். அதேபோல் தான் ஊழியத்தில், யார் தேவனுக்காக துணிந்து செயல்படுகிறார்களோ, அவர்களையே தேவன் வல்லமையாக பயன்படுத்தவும் விரும்புகிறார். பிலிப்பு தேவனுக்காக துணிந்து செயல்பட்டதினால் பரிசுத்த ஆவியின் வரங்களும், வல்லமைகளும் அவர் மூலம் கிரியை செய்தது. அநேக ஜனங்கள் அவர் மூலம் விடுதலையையும், இரட்சிப்பையும் பெற்றுக் கொண்டனர்.

இன்று தேவனுக்காக துணிந்து செயல்படுகிற வாலிபர்களை தேவன் தேடிக் கொண்டிருக்கிறார். அவர்களை வரங்களினாலும், வல்லமையினாலும் நிரப்பி பயன்படுத்த ஆயத்தமாக இருக்கிறார். ஆகையால் நம்மை எழும்ப விடாமல் தடைசெய்கிற எதிர்ப்புகள், போராட்டங்கள் மற்றும் பிரச்சனைகளை பரிசுத்த ஆவியின் பெலத்தினால் மேற்கொண்டு, எழுப்புதலில் தீவிரமாக செயல்பட அர்ப்பணிப்போம்.

## ஆவியானவரின் சத்தத்தை துல்லியமாக கவனித்தார்



பிலிப்பு இயேசுவுக்காக பெரிய காரியங்களைச் செய்ய மற்றொரு காரணம், அவர் ஆவியானவரின் சத்தத்தை கேட்பதற்கு கவனமாக இருந்தார். அவர் எங்கு போக வேண்டும், என்ன பேச வேண்டும் என்கிற அனைத்தையும் ஆவியானவரே அவருக்கு போதித்தார். அப்போஸ்தலர் 8ம் அதிகாரத்தில், ஆவியானவர் பிலிப்பை வனாந்திரத்திற்கு போக சொன்னார். பின்னர் அந்த வழியாக வந்த எத்தியோப்பிய மந்திரியின் இரதத்தோடு சேர்ந்து கொள்ள சொன்னார். ஆவியானவரின் எல்லா அறிவுறுத்தல்களையும் கவனித்து செயல்பட்டதினால் ஒரு தேசத்தின் மந்திரி இரட்சிக்கப்பட்டார். வனாந்திரத்தில் ஒருவரும் இருக்க மாட்டார்கள், யாரும் இல்லாத இடத்தில் நான் என்ன ஊழியம் செய்வது என்று யோசித்து அந்த சத்தத்திற்கு செவி கொடாமல் இருந்திருப்பார் என்றால் அந்த மந்திரி இரட்சிக்கப்பட்டிருக்க முடியாது. வேத ஆராய்ச்சியாளர்கள், எத்தியோப்பிய மந்திரியின் மூலம் சுவிசேஷம் எத்தியோப்பிய தேசத்திலும், ஆப்பிரிக்க கண்டத்திற்குள்ளும் சென்றிருக்கக் கூடும் என்று யூகிக்கின்றார்கள். ஆவியானவரின் வழிநடத்துதலை நம்பும் போதும், விசுவாசிக்கும் போதும், அதின்படி செயல்படும் போதும் அது ஒரு மனிதனுக்கு மட்டுமல்ல, ஒரு தேசத்திற்கு மட்டுமல்ல, ஒரு கண்டத்திற்கே ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்தது.

நாமும் நமக்குள் வாசம் செய்யும் ஆவியானவரின் சத்தத்திற்கு கீழ்ப்படியும் போது, ஒரு மனிதனுக்கு மட்டுமல்ல, ஒரு தேசத்திற்கே ஆசீர்வாதமாக மாற முடியும்.



அன்பு வாலிபர்களே, இன்று உலகமே பணம், பெயர், புகழ் மற்றும் உலக இச்சைகளை தேடி ஓடிக் கொண்டிருக்கிறது. இந்த பரபரப்பான உலகில் இயேசுவின் விலையேறப் பெற்ற இரத்தத்தால் மீட்கப்பட்ட நாம் இயேசுவின் பின்பா? அல்லது உலகத்தின் பின்பா? எதன்பின் ஓடிக்கொண்டிருக்கிறோம் என்பதை யோசித்து பார்ப்போம். தேசத்தில் அறுவடை மிகுந்திருக்கிறது. அதே நேரத்தில் எதிர்ப்புகளும், போராட்டங்களும் அதிகரித்திருக்கிற இந்த கால கட்டத்தில், நம் ஓட்டம் பரிசுத்த ஆவியானவரால் நிறைந்து, அவருடைய சத்தத்தை நுணுக்கமாக கவனித்து ஓடினால் மட்டுமே வெற்றிகரமாக ஓட முடியும். ஆவியானவரின் சத்தத்தைக் கேட்காமல் மனித சத்தத்தையோ, நம் சுயத்தையோ சார்ந்திருப்போமானால் நமக்கு தோல்வி ஏற்படும் அல்லது தவறான பாதையில் நம்மை கொண்டு போய் விட்டு விடும். ஆகையால் நமக்கு நியமிக்கப்பட்ட ஓட்டத்தைப் பொறுமையோடு, கவனமாக, இயேசுவை மட்டுமே சார்ந்து ஓடுவோமானால் எப்படிப்பட்ட நெருக்கத்திலும், உபத்திரவத்திலும் திரளான ஆத்துமாக்களை சந்தித்து, இரட்சிப்புக்குள் நடத்தவும், எழுப்புதலை பரவச் செய்யவும் தேவன் நமக்கு கிருபை செய்வார்.

"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்" (ஏசாயா 40:31).

# Coffee with பத்திரிக்கையாளர்

பேசலாம் வாங்க: வயலா



## பரதீசுக்கு பாத்திரனான கள்ளன்

பரிசுத்த வேதாகமத்தில் பெயர் குறிப்பிடப்படாமல் தங்கள் செய்கையினால், பேச்சினால் அல்லது வேண்டுதலினால் அறியப்பட்ட நபர்களுள், இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட பரதீசுக்கு பாத்திரனான கள்ளன் குறிப்பிடத்தக்கவர். இயேசு உயிர்த்தெழுந்த பண்டிகை கொண்டாடப்படும் இந்த மாதத்தில் நம்முடைய பத்திரிக்கையாளர் இவரை சந்தித்து இருப்பாராயின் அவர்கள் மத்தியில் நடைபெறும் உரையாடலின் கற்பனைத் தொகுப்பை கீழேக் காண்போம்.

**பத்திரிக்கையாளர்:** வணக்கம் அண்ணே!

**ப.பா.கள்ளன்:** வணக்கம்.

**பத்தி:** எங்கள் வாலிபச் செல்வங்களுக்கு, இயேசுவுடனான உங்கள் அனுபவத்தைப் பற்றி கொஞ்சம் சொல்றீங்களா?

**ப.பா.கள்ளன்:** தம்பி, நான் ஜெப வீரனோ, விசுவாச வீரனோ, சீஷனோ அப்போஸ்தலனோ அல்ல. சதுசேயர், பரிசேயர் மற்றும் சகல மனுஷராலும் அக்கிரமக்காரன் என்று அழைக்கப்பட்டு, மரண ஆக்கினைக்கு பாத்திரனாக, சிலுவையில் மரணத் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்ட கள்ளன், என்னைப் போய் பத்திரிக்கையாளருடனான சந்திப்புக்கு தெரிந்தெடுத்து இருக்கீங்களே?

**பத்தி:** அண்ணே, எல்லா மனிதருக்கும் அவர்கள் நித்திய ஜீவனுக்கா? அல்லது நித்திய ஆக்கினைக்கு உள்ளானவர்களா என்று அவர்கள் மரணத்துக்கு பின் தான் தெரியும். ஆனால் நீங்கள் மரிக்கும் முன்னே இயேசுவிடமே, 'பரதீசிலிருப்பாய்' என்று வாக்குப் பெற்றவர்கள். உண்மையிலேயே நீங்கள் Great அண்ணே!

**ப.பா.கள்ளன்:** ஆம். அது இயேசு எனக்குப் பாராட்டிய பெரிய கிருபை தான். சரி... நான் சொல்றேன் கேளுங்க. நான் முதலில் இயேசுவை என்னைப் போல் ஒரு சாதாரணமான மனிதன் என்று தான் நினைத்தேன். நாங்கள் சிலுவையில் அறையப்பட்டிருந்த இடத்தை கடந்து போகிறவர்கள் பலவாறாக இயேசுவைத் தூஷித்தார்கள். மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தான் இரட்சித்துக் கொள்ள திராணியில்லை என்றெல்லாம் ஏளனம் செய்தார்கள். ஏன் வலது-இடது புறம் சிலுவையில் அறையப்பட்ட கள்ளர்கள் நாங்கள் கூட இயேசுவை நித்தித்து பேசினோம்.

**பத்தி:** அதைக் கேட்டு இயேசு ஏதாவது சொன்னாரா?

**ப.பா.கள்ளன்:** இல்லை, அவர் மௌனமாகத்தான் இருந்தார். ஆனால் அவரது முகம் துக்கத்தால் நிறைந்திருந்தது.

**பத்தி:** அப்படியா?

**ப.பா.கள்ளன்:** இயேசு சிலுவையில் பேசிய முதல் வார்த்தை, 'பிதாவே! இவர்களுக்கு மன்னியும்!' இந்த வார்த்தை என்னை மிகவும் தொட்டது.

**பத்தி:** எப்படி?

**ப.பா.கள்ளன்:** இயேசு அனைவருக்கும் நன்மை செய்கிறவராகவே சுற்றித் திரிந்தார். பரிசேயர்கள், சதுசேயர்கள் பொறாமையினாலே அவருக்கு மரணத் தண்டனைப் பெற்றுத் தந்தனர். சிலுவையில் அவர் பட்டப்பாடுகள்... விவரிக்கவே முடியாதவை. அவரது சரீரத்தில் ஒவ்வொரு அவயவமும் வேதனையால் துடித்தது. அவரால் பேசக் கூட முடியவில்லை. அந்த சூழ்நிலையிலும் அவரது

வாயில் கோபமான சொற்களோ, சாப வார்த்தைகளோ புறப்படவில்லை. எந்த பழிவாங்கும் எண்ணமும் அவருக்குள் இல்லை. மாறாக அன்பு நிறைந்த இருதயத்தோடு அவர்களை மன்னிக்கிறார். தன்னைத் துன்பப்படுத்தியவர்கள் மன்னிப்பு கேட்கவும் இல்லை. தாங்கள் செய்தது தவறு என்று உணரவும் இல்லை. வாயிலிருந்து வார்த்தைகளை உச்சரிப்பதற்கே கடினமான சரீர வலியோடு தன்னை கடும் வேதனைக்குள்ளாக்கியவர்கள் கூட ஆக்கினை அடைவதை விரும்பாமல் தன் பிதாவிடம், அந்த கொடியவர்களை கல் நெஞ்சம் படைத்தவர்களை மன்னித்து ஜெபிப்பது ஒரு சாதாரண மனிதனால் கூடாதக் காரியம். இயேசு விசேஷித்தவர், தெய்வீக தன்மை உடையவர் என்பதை அப்பொழுது தான் உணர முடிந்தது.

**பத்தி:** உங்களை சிலுவையில் அறைந்தவர்களைப் பற்றி நீங்கள் என்ன நினைத்தீர்கள்?

**ப.பா.கள்ளன்:** என்னுடைய அக்கிரமத்துக்குரிய தண்டனையையே நான் அடைந்து இருந்தாலும் என்னால் அவர்களை மன்னிக்க முடியவில்லை. அவர்கள் மேல் ஆத்திரமும், அவர்களை சபிக்கவுமே என் மனதில் தோன்றியது.

**பத்தி:** பின் என்ன நடந்தது?

**ப.பா.கள்ளன்:** என்னை அவருடன் ஒப்பிட்டுப் பார்த்த போது தான் எனக்கு உணர்வுள்ள இருதயமே வந்தது. அவர் தேவ குமாரன் என்பதை என் மனது ஏற்றுக் கொண்டது. இயேசு கூறியிருந்த வார்த்தைகள், அவரைக் குறித்து நான் கேள்விப்பட்டிருந்த வார்த்தைகள் எல்லாம் என் நினைவில் வந்தது. இயேசு கூறியதெல்லாம் உண்மை என்று விசுவாசித்தேன்.



**பத்தி:** உங்களுடன் சிலுவையில் அறையப்பட்ட மற்ற நண்பர் விசுவாசித்தாரா?

**ப.பா.கள்ளன்:** இல்லை. அவன் இம்மைக்குரிய ஆசீர்வாதமே கிடைக்க விரும்பினான். அதாவது இயேசு, தேவ குமாரன் என்றால் தன்னுடைய இறை வல்லமையால் தானும் சிலுவை மரணத்தில் இருந்து விடுதலையாகி எங்களுக்கும் விடுதலைப் பெற்றுத் தரவே விரும்பினான். அது நடக்கவில்லை என்பதால் அவன் விசுவாசிக்கவில்லை.

**பத்தி:** உங்கள் நண்பர் இயேசுவை ஏற்றுக் கொள்ள நீங்கள் என்ன செய்தீர்கள்?

**ப.பா.கள்ளன்:** நான் அவனை தேவனுக்கு பயப்படும்படி அறிவுறுத்தினேன். "நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம். இயேசுவோ தகாததொன்றையும் செய்யவில்லை" என்று அவன் இயேசுவை நிந்தித்த போது அவனைக் கடிந்துக் கொண்டேன். ஆனால் அவனோ பெரிதாக அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

**பத்தி:** ம்... அப்புறம் என்ன நடந்தது?

**ப.பா.கள்ளன்:** நாங்கள் மூவருமே மரணத்தின் விளிம்பில் இருந்தோம். எனவே நான் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. மறுமைக்குரிய சிந்தையோடு இயேசுவிடம் விண்ணப்பித்தேன்.

**பத்தி:** நீங்கள் செய்த முதல் விண்ணப்பமும் அது தான். கடைசி விண்ணப்பமும் அதுதான்! என்ன அண்ணே?

**ப.பா.கள்ளன்:** ஆமா தம்பி, நான் இயேசுவிடம் விண்ணப்பித்தது ஒரே தடவை தான். அதை அவர் உடனே ஏற்றுக் கொண்டார். நான் ஒரு பாவி என்றோ, அக்கிரமக்காரன் என்றோ அவர் வெறுக்கவில்லை. அன்போடு என்னை ஏற்றுக் கொண்டு உடனே எனக்கு பரதீஸை வாக்குப்பண்ணினார். அவருடைய அன்பும் இரக்கமும் மிகவும் பெரியது (வாசிக்க: லூக்கா 23:39-43).

**பத்தி:** ஆமா அண்ணே! நீங்க உண்மையிலேயே கொடுத்து வச்சவுங்க தான். வாழ்க்கையின் கடைசி நிமிஷத்துல கிடைக்கக்கூடிய மிக மிகப் பெரிய ஆசீர்வாதத்தை இயேசுவிடம் பெற்று விட்டீங்க. சரி அண்ணே, நீங்க எங்க வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீங்க?

**ப.பா.கள்ளன்:** "வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை" என பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. என்னைப் போல வாழ்நாளையெல்லாம் வீணாக்கி விட்டு கடைசி நிமிடத்தில் இயேசுவிடம் வந்து விடலாம் என்று யாரும் எண்ணி விடாதீர்கள். இதோ இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள். இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து கவலையற்று இருப்பீர்களானால் தண்டனைக்கு தப்பித்துக் கொள்ளவே முடியாது. இயேசுவுக்காக வாழும் வாழ்க்கை உன்னதமானது, மகத்துவமானது. வாழும் போதும் ஆசீர்வாதத்தையும் மறுமையில் நித்திய ஜீவனையும் உறுதியாய்ப் பெற்றுத் தரும் இயேசுவுடனான எனது பயணம் வாழ்வின் இறுதி நொடிகளில் தான் எனக்குத் தொடங்கியது. ஆனால் வாலிபச் செல்லவங்களே! உங்களுக்கு அது இப்பொழுதுதே தொடங்கி என்றென்றைக்கும் நிலைத்தும், நீடித்தும் இருக்கும்படி வேண்டி விடைபெறுகிறேன். நன்றி!

**பத்தி:** நன்றி அண்ணே!

# செய்திகள்!

## உக்ரைனில் அமைதி திரும்ப ஆக்கப்பூர்வமான நடவடிக்கை! குவாட் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டறிக்கை!



உக்ரைனுக்கு நீதி கிடைக்கவும் அங்கு அமைதி திரும்பவும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து டெல்லியில் நடந்த குவாட் மாநாட்டில் கலந்து ஆலோசிக்கப்பட்டதாக வெளியுறவு அமைச்சர்களின் கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

குவாட் என்பது இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய நான்கு நாடுகளின் பாதுகாப்பு தொடர்பான ஒத்துழைப்பு அமைப்பு ஆகும். (இதன் மாநாடு நேற்று டெல்லியில் நடந்தது.)

ஜி-20 வெளியுறவு அமைச்சர்களுக்கான மாநாடு டெல்லியில் கடந்த 2 நாட்களாக நடந்தது. இதில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, உள்பட 40 நாடுகளை சேர்ந்த வெளியுறவு அமைச்சர்கள் கலந்து கொண்டனர். இதைத் தொடர்ந்து, ஒன்றிய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தலைமையில் குவாட் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு டெல்லியில் நேற்று நடந்தது. இதில் கலந்து கொள்வதற்காக ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் யோஷிமாசா ஹயாஷி டெல்லி வந்திருந்தார்.

இந்த கூட்டம் முடிந்த பின்னர் குவாட் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் வெளியிட்ட கூட்டறிக்கையில், 'இந்த கூட்டத்தில் உக்ரைன் போர், அதனால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து குவாட் அமைப்பு ஆலோசித்தது. இந்த போரில் அணு ஆயுதத்தை பயன்படுத்துவதான மிரட்டலை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள கூடாது என்று முடிவு எடுக்கப்பட்டது. ஐநா உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் வரையறுத்த விதிகளுக்கு உட்பட்டு உக்ரைனுக்கு நீதி கிடைக்கவும், அங்கு அமைதி திரும்பவும் ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்வதன் அவசியம் குறித்து விவாதிக்கப்பட்டது.

சர்வதேச விதிகளுக்குட்பட்டு ஒரு நாட்டின் இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு, வெளிப்படைத்தன்மையுடன் சர்ச்சைகளுக்கு அமைதியான முறையில் தீர்வு காண வலியுறுத்தப்பட்டது.

மேலும், சீனாவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து வருவது கவலை அளிக்கக்கூடியதாக உள்ளதால், இந்தோ-பசிபிக் நிலவரங்கள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சுகாதாரப் பாதுகாப்பு, பருவநிலை மாற்றம், தூய்மையான எரிசக்தி பரிமாற்றம், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள், உள்கட்டமைப்பு போன்றவற்றில் ஒத்துழைப்பை அதிகரிப்பதன் மூலம் பிராந்தியத்தை ஆதரிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்' என்று கூறப்பட்டுள்ளது.

## கூட்டறிக்கைக்கு சீனா கண்டனம்!

குவாட் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டறிக்கைக்கு கடும் கண்டனம் தெரிவித்து பீஜிங்கில் செய்தியாளர்களை சந்தித்த சீன வெறியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் மாவோ நிங், "பிராந்தியத்தின் பரஸ்பர நம்பிக்கை, அமைதி மற்றும் பிராந்திய நிலைத்தன்மைக்கு பங்களிக்க ஒவ்வொரு நாடும் கூடுதல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஆனால், குவாட் அமைப்பு பிராந்தியத்தின் நிலைத்தன்மையை விட அதன் தனித்தன்மையை நிலைநிறுத்த முயற்சிக்கிறது. சீனாவின் வளர்ச்சியை கட்டுப்படுத்தும் தனிப்பட்ட தடுப்பு அமைப்பாகவே குவாட் செயல்படுகிறது" என்று கண்டனம் தெரிவித்தார்.

– தினகரன், 4 மார்ச் 2023.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

# வாலிபர் எழுப்புதல் கூடுகை!

வாலிபர்களை எழுப்புதலில் பயன்படுத்துவேன். என்று தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தின்படியே வாலிபர்களை தேசமெங்கும் எழுப்பி வருகிறார். ஒவ்வோரு வருடமும் தேவன் வாலிபர் எழுப்புதல் கூடுகை நடத்தி அநேக வாலிபர்களை எழுப்புதலுக்காக ஜெபிக்கிறவர்களாக மாற்றி வருகிறார். இந்த வருடமும் கடந்த 3 மாதங்களில் ஆந்திரா மாநிலம் புத்தூர், தஞ்சாவூர், பேர்ணாம்பட், பொள்ளாச்சி மற்றும் இராமநாதபுரத்தில் வாலிபர் எழுப்புதல் கூடுகைகள் நடத்த தேவன் கிருபை செய்தார். சுமார் 2000க்கும் அதிகமான வாலிபர்கள் கலந்து கொண்டு எழுப்புதல் தரிசனத்தை அறிந்து ஜெபிக்கவும், சுவிசேஷத்தை அறிவிக்கவும் தங்களை அர்ப்பணித்தனர். இக்கூடுகையில் பங்கு பெற்ற வாலிபர்கள் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட கைப்பிரதிகளை வாங்கி சென்று, தங்களுடைய பகுதிகளில் ஊழியம் செய்ய ஆரம்பித்துள்ளனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!












Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 03 -2023
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

# வாலிபர் எழுப்புதல் கூடுகை

## காஞ்சிபுரத்தில்...

**ஏப்ரல் 14,**
வெள்ளிக்கிழமை
நேரம்: மாலை 4 மணி முதல் 7 மணி வரை
இடம்: S.S. மஹால், ஓரிக்கை ரோடு, காஞ்சிபுரம்

*செய்தியும் ஜெபமும்:*
**சகோ. அவினாஷ்**
தொடர்புக்கு : 9488475315 I 8903635315

## சேலத்தில்...

**ஏப்ரல் 22,**
சனிக்கிழமை
நேரம்: காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை
இடம்: சூசன் அம்மாள் ஹால், அப்சரா இறக்கம், கோட்டை

*செய்தியும் ஜெபமும்:*
**சகோ. அவினாஷ்**
தொடர்புக்கு : 99620 85523
94421 31315 I 8300019710

## ஈரோட்டில்...

**ஏப்ரல் 23,**
ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை 5:30 மணி முதல் 8.30 மணி வரை
இடம்: வெள்ளிவிழா மேடை
சி.எஸ்.ஐ பிரப் நினைவாலயம், பிரப் ரோடு

*செய்தியும் ஜெபமும்:*
**சகோ. அவினாஷ்**
தொடர்புக்கு : 9750722000 I 9442885315

## தாராபுரத்தில்....

**ஏப்ரல் 14,**
வெள்ளிக்கிழமை
நேரம்: காலை 9 மணி முதல் 1 மணி வரை
இடம்: சிவரஞ்சனி மஹால் உடுமலை ரோடு

*செய்தியும் ஜெபமும்:*
**சகோ. சதீஷ் குமார்**
தொடர்புக்கு : 9442082200
9944360222

## கொடைக்கானலில்...

**ஏப்ரல் 15,**
சனிக்கிழமை
நேரம் : காலை 10 மணி முதல் 2 மணி வரை
இடம் :சி.எஸ்.ஐ. கிறிஸ்து நாதர் ஆலயம் (டவுண்)

*செய்தியும் ஜெபமும்:*
**சகோ. சதீஷ் குமார்**
தொடர்புக்கு :
98422 95081 I 63823 92446

## திருச்சியில்...

**ஏப்ரல் 16,**
ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மாலை 3 மணி முதல் 6 மணி வரை
இடம்: TELC நல்மேய்ப்பர் ஆலயம், பாரீஷ் ஹால், பிஷப் ஹீபர் கல்லூரி எதிரில், புத்தூர்

*செய்தியும் ஜெபமும்:*
**சகோ. சதீஷ் குமார்**
தொடர்புக்கு : 9489775075


சகோ. அவினாஷ்


சகோ. சதீஷ் குமார்


சகோ. காலேப்

## அரக்கோணத்தில்...

**மே 28,**
ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மாலை 3 மணி முதல் 6 மணி வரை
இடம் :பெத்தேல் ஜெப வீடு, ரயில்வே ஸ்டேஷன் ரோடு, S.R. Gate,

*செய்தியும் ஜெபமும்:*
**சகோ. காலேப்**
தொடர்புக்கு : 97905 48057